IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE

JHLC - ESTD:10.09.1943

## யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

# தமிழ் ஆரம்



ஆரம் - 08

**தமிழ் மன்றம்**

**2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆரம்

## 2025

## இதழ் - 08

**யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி - உயர்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த் தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடும் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச்சுடரினை யுளத்திற்
பொறித்திடும் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சியமனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கிடும் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.


கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடும் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனைத்
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியினால் வருடந்தோறும் தமிழ்மொழித்தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் ஆரம் சஞ்சிகைககான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

'வாசிப்பு தனிப்பட்ட அறிவு வளர்ச்சிக்கும் சமூகமேம்பாட்டிற்கும் இன்றியமையாதது' என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் இந்த சஞ்சிகை வெளியீடு வரவேற்கத்தக்க நல்லதொரு விடயமாகும். வாழ்வில் நல்லதோர் நிலையை அடைய வாசிப்பு பெரிதும் உறுதுணையாகின்றது. இவ்வாறான சஞ்சிகை வெளியீடுகளினால் மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியும் ஏற்படுகின்றது. இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென வாழ்த்துவதுடன் இச்சஞ்சிகை வெளியீட்டில் பங்களித்த அனைவருக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. யோ. ஜெயச்சந்திரன்**
**மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித்திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆரம்" தொடர்ந்தும் அணி சேர்க்கட்டும்....



யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியின் தமிழ்மன்றத்தினால் வருடந்தோறும் தமிழ்மொழித் தினத்தையொட்டி வெளியிடப்படும் "ஆரம்" சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தற்காலத்தில் ஊடகங்களின் தாக்கத்தினால் எழுத்து, வாசிப்பு ஆகிய மொழித்திறன்கள் பெரிதும் குறைவடைந்துள்ள நிலையில் இவ்வாறான சஞ்சிகை வெளியீடு பெரிதும் ஆறுதல் அளிப்பதோடு வரவேற்கத்தக்கதாயும் அமைந்துள்ளது. நிச்சயம் தமிழ்த் தாய் மகிழ்வெய்தியிருப்பாள்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் துறைசார்ந்தோரின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை பெரிதும் வரவேற்கத்தக்க ஒரு ஆக்கபூர்வமான முயற்சியாகும். இக் கல்லூரியின் தமிழ்மன்றத்தினால் இனிவரும் காலங்களிலும் இவ்வாறான ஆக்கத்திறன் சார்ந்த ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தொடர்ந்து வரும் காலங்களிலும் "ஆரம்" அணிசேர்க்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன். இத்தகைய நல்ல முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டுக்கள்.

"இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது"

**திருமதி. கவிதா சந்திரகுமார்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்)**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



எமது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தால் "ஆரம்" சஞ்சிகை வெளியிடப்படுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

மொழி என்பது ஒரு இனத்தின் அடையாளமும், பண்பாட்டு மரபின் உயிர்ப்பும் ஆகும். இவ்வுலகில் தமிழ்மொழி வகிக்கும் இடம் சிறப்புடையது.

எமது மாணவிகள் தமிழ் மொழியின் செம்மையும், செழுமையும் உணர்ந்து அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஆவலாகச் செயற்படுவது அவசியமாகும். இத்தகைய நோக்கத்துடன் தமிழ் மன்றம் மேற்கொண்டு வரும் பணிகள் பராட்டத்தக்கன.

"ஆரம்" எனும் இச் சஞ்சிகை மாணவிகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் மேடையாகவும், சிந்தனையைத் தூண்டும் களமாகவும் திகழ்கின்றது. இத்தகைய வெளியீடுகள் மாணவிகளின் எழுத்துத் திறனை வளர்ப்பதுடன் அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், பண்பாட்டுச் செழுமைக்கும் பங்களிக்கின்றன.

இச் சஞ்சிகை வருடந்தோறும் வளர்ச்சியடைந்து மொழி, இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் எமது மாணவிகளின் பங்காற்றலை வெளிப்படுத்தும் அரிய ஆவணமாக தொடர வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

இச்சஞ்சிகையானது சிறப்பாக வெளிவருவதற்கு ஒத்துழைத்த அனைத்து ஆசிரியர்களுக்கும், தமிழ் மன்ற மாணவிகளுக்கும், இதழாசிரியராக செயற்பட்ட மாணவிக்கும் என் இதய பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வி.சுமதி கந்தசாமி,**
**அதிபர்**
**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்ற பொறுப்பாசிரியர் இதயத்திலிருந்து...



**இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்**
**என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்**
**துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சில்**
**தூய்மை யுண்டாகிவிடும்...**

இன்றைய உலகம் தொழிநுட்ப ரீதியில் மிகவும் முன்னேறி வருகின்ற நிலையிலும், அரசின் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு அமைவாக மாணவர்களின் கல்வி நிலையில் பலமாற்றங்களை உருவாக்கி வருகின்றன. இந்த நிலையில் மாணவர்களும் தங்களது எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டிய நிலையுள்ளது. இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கே உரியது.

எனவே ஒரு மாணவன் கல்வியில் முழுமையடைந்து பாடசாலையை விட்டு வெளியேறும் வரை அவனது ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அந்த வகையில் ஒரு கல்லூரி வருடந்தோறும் குறைந்தது ஒரு மலரையாவது வெளியிட வேண்டும். தற்போதைய உயர்கல்வி கற்கும் மாணவர்கள் செயற்றிட்டங்களில் விரும்பியோ, விரும்பாமலோ ஒரு அறிக்கை மலர்வடிவில் தயாரிக்க வேண்டியுள்ளது. இது அவர்களை பயனுள்ளவர்களாக மாற்றி விடுகின்றது.

இதே போல எமது கல்லூரியின் தமிழ் மன்றமும் மாணவச்செல்வங்களது கன்னல் தமிழின் பல்வித ஆக்கங்களை மலர்களாகக்கொண்டு "தமிழ் ஆரம்" சஞ்சிகையை இறையாசியுடன் வெளியிடுவதையிட்டு அகமகிழ்கின்றேன். "தமிழ் ஆரம்" மேலும் செழுமையடைய ஆசிரியர்களதும், கல்வியியலாளர்களதும் பல்துறை ஆக்கங்கள் விளங்குகின்றன.


"தமிழ் ஆரத்தை" குறுகிய காலத்தில் சிறப்பாகப் புனைவதற்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும், ஒத்தாசையும் நல்கிய அனைத்து உள்ளங்களையும் நன்றியுணர்வுடன் நோக்கி எதிர்காலத்திலும் இவ் ஆரம் சஞ்சிகையானது பல மாற்றங்களை உள்வாங்கி பிரகாசித்து கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி சுபத்திரா சிவரூபன்**
**பொறுப்பாசிரியர்**
**தமிழ் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியின் உள்ளத்திலிருந்து...



யாழ் மண்ணிலே சைவத்தையும் தமிழையும் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து அறிவை வழங்குகின்ற யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவர் என்னும் தகைமையுடன் சில மனப்பதிவுகளை முன்வைக்கின்றேன்.

இம்முறை தமிழ் மன்றமானது வெற்றிகரமாகத் தனது எட்டாவது ஆரத்தினை வெளியிடுகின்றமை மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. எமது சகோதரிகள், ஆசிரியர்கள் மற்றும் சான்றோர்களின் திறமைகளும் ஆளுமைகளும் ஆக்கங்களாகத் தொகுத்து இன்று எல்லோர் கைகளிலும் ஆரமாகத் தவழ்கின்றது. மாணவிகள் தமது திறமைகளை வெளிப்படுத்த சிறந்த களமாக தமிழ் ஆரம் விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


தமிழ் ஆரம் தொடர்ந்தும் அறிவு நிறைந்த சுவடிச்சாலையாக மிளிர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எம் ஆரம் சிறப்பதற்கு ஆசிச்செய்தியையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கு நன்றியை கூறிக்கொள்கின்றேன். மேலும் ஆரம் மிளிர உதவிய ஆசிரியர்களிற்கும் நன்றியைக்கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் எந்நேரமும் மன்றம் சிறக்க உதவிய மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைக் கூறி இறுதியாக ஆரம் சிறக்க விளம்பரங்களை தந்துதவிய நிறுவனங்களுக்கும். நன்றி கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன்.

**செல்வி. அருணங்கை சதீஸ்வரன்**
**க.பொ.த. உயர் தரம் (கலைப் பிரிவு)**
**யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து...



வடமாகாணத்தில் சிறப்புடன் இயங்கும் பெண்கள் கல்லூரிகளில் முதனிலை வகிக்கும் எம் கல்லூரி வெளியிடும் தமிழ் ஆரத்தின் எட்டாவது இதழ் வெளியிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பின்னர் மாணவர்கள் மத்தியில் வாசிப்புத்திறன் அருகிவிட்டது. ஓவ்வொரு மாணவர்களுக்கும் கிரகித்தல் பேசுதல் வாசித்தல் எழுதுதல் ஆகிய திறன்கள் அடிப்படையாகும். நூல்கள் பலவற்றை வாசிக்கும் போது உண்மைத்தன்மை ஒன்று எமக்குள்ளேயே பிறக்கும். இதனை விட வாசிப்புத்திறன் அதிகமாக இருக்கும் ஒருவரிடம் படைப்பாற்றற்றிறன் அதிகமாகக் காணப்படும்.

ஆகவே எம் கல்லூரிச் சிறுவர்களிடம் நிறைந்திருக்கும் படைப்பாற்றல் திறன்களை வெளிக்கொணரும் விதத்தில் தமிழாரம் அமைவதனையிட்டுப் புளகாங்கிதம் அடைகின்றோம்.

எமது சஞ்சிகை உங்கள் கையில் தவழ ஒத்துழைத்த திரு.இ.நஜன் ஆசிரியருக்கும் மற்றும் திருமதி.சு.தேவகி ஆசிரியருக்கும் முதல்கண் நன்றியை தெரிவுத்துக்கொண்டு, ஏனைய தமிழ்ப்பாட ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக விரும்புகின்றேன்.

எமது சகோதரிகள் காட்டிய படைப்பாற்றற் பாதையில் இன்று நாம் பயணித்துள்ளோம். அதேபோல் எம் இளைய சகோதரிகளும் பயணிக்க இறைவனிடம் ஆசி வேண்டி விடைபெறுகின்றோம்.

செல்வி. பூர்ணிக்கா சிவகுமார்
க.பொ.த. உயர் தரம் (கலைப் பிரிவு)
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## தமிழ் மன்றம் – 2025

இதழாசிரியர் :- செல்வி பூர்ணிகா சிவகுமார்

ஆசிரிய ஆலோசகர்கள் :- திருமதி குணவதி சுபாஸ்கரன்

:- திருமதி ரஜனி ராஜமனோகரன்

:- செல்வி ஜெயந்தி சக்திவேல்

:- திருமதி சோதிமலர் நவநீதகிருஷ்ணன்

:- திருமதி நவமணி ராஜ்குமார்

:- திருமதி சீதா செல்வகுமார்

:- திருமதி சுதாகரன் தேவகி

மலர்க்குழு :- செல்வி கிருஸ்திகா இரவீந்திரன்

:- செல்வி விதுஷா ரஜீவன்

:- செல்வி சப்னா யோகேஸ்வரன்

:- செல்வி தீபிகா விஜயகுமார்

:- செல்வி தீபிகா ஸ்ரீகாந்தன்

:- செல்வி ரேணுபிரசாளினி மலரவன்

:- செல்வி துலக்ஷிரஸ்மிந்தி அருட்காந்தன்

:- செல்வி ரெம்சிகா ரெம்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி – 2025
## கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் தெரிவானோர் விபரம்.

| போட்டி இல. | நிகழ்ச்சி | பிரிவு | மாணவரின் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 44 | நாட்டிய நாடகம் | திறந்த போட்டி | ஹர்ஷியா சதானந்தன்<br>தன்ஷியா சாரங்கன்<br>கிஷானி மனோகரன்<br>கேனுயா<br>யோகேஸ்வரன்<br>ஸ்ருதி சிவகுமாரன்<br>அருணங்கை<br>சதீஸ்வரன்<br>ஸ்ரீஅக்ஷாயினி<br>பிரணவநாதசர்மா<br>கேமா பாலச்சந்திரன்<br>வித்தியாசாயினி<br>இராஜலிங்கம்<br>துளசிகா கருணாகரன்<br>பூர்வஜா சிவகுமார்<br>பானுஜா யோகசீலன் | 01 | 01 | 01 | 01 |
| 46 | இலக்கிய நாடகம் | திறந்த போட்டி | மதுர்யனா சபேசன்<br>தனுசியா சிவசங்கர்<br>தீபரக்சனா சுதாகரன்<br>அபிஷா தேவநேசன்<br>டுலக்ஷி றஸ்மிந்தி<br>அருள் காந்தன்<br>ஜஸ்மிதா சதீஸ்குமார்<br>தாட்சாயினி<br>பாலேஸ்வரன்<br>வைஸ்ணவி<br>ரஜீவ்மோகன்<br>நிவேதா விஜயதீபன்<br>அபிஷா செல்வகுமார்<br>தாரிகா றங்கன்<br>கர்ணி கேதீஸ்வரன் | 01 | 01 | 01 | 01 |
| 49 | தமிழறிவு வினாவிடை | திறந்த போட்டி | கம்சனா அன்பரசன்<br>அனந்திகா வரதராசா<br>மதுராஜினி<br>புவனேந்திரன்<br>மதுஷஷீகா நிரஞ்சன்<br>குமுதினி விஜயகுமார் | 01 | 01 | 03 | - |
| 06 | இலக்கணப் போட்டி | 04 | சுதேந்திரன் சாருஜா | 01 | 01 | 02 | - |
| 07 | இலக்கணப் போட்டி | 05 | புவனேந்திரன் மதுராஜினி | 01 | 02 | - | - |
| 08 | திறனாய்வு | 05 | அன்பரசன் கம்சனா | 01 | 01 | 01 | - |
| 10 | குறுநாடக ஆக்கம் | 05 | ரவிச்சந்திரன் பிரியங்கா | 01 | 01 | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **15** | தமிழறிவு வினாவிடை | குழு 1 | ஸ்ரீனிமல் ரானியா<br>கலைச்செல்வன் ருசானி<br>சசிகுமார் மினி'ா<br>சசீதரன் ஹன்சியா<br>பத்மநாதன் கோ'ிகா | 01 | 02 | - | - |
| **17** | வாசிப்பு | 02 | தேவநேசன் தனுஷா | 02 | - | - | - |
| **18** | வாசிப்பு | 03 | ஞானச்சந்திரன் அட்சயா | 01 | 01 | - | - |
| **28** | பாவோதல் | 04 | முகுந்தன் சம்யுத்தா | 02 | - | - | - |
| **29** | இலக்கிய விமர்சனம் | 05 | ஸ்ரீக்காந்தன் தீபிகா | 02 | - | - | - |
| **33** | இசை தனி | 02 | யசீதரன் அகஷயா | 03 | - | - | - |
| **34** | இசை தனி | 03 | முரளிதரன்<br>சகானா | 01 | 01 | 02 | - |
| **35** | இசை தனி | 04 | சிவனேசகுமார்<br>வர்சவி | 01 | 02 | - | - |
| **36** | இசை தனி | 05 | சிவம் டிலக்சனா | 01 | 02 | - | - |
| **37** | இசை குழு 01 | குழு 01 | மணிமாறன் பவானுஜா<br>சிவரூபன் நி'ானிகா<br>குணசீலன் அகஷயா<br>குணஈஸ்வரன்<br>ஷாருகேசி<br>சுந்திரகும்ர் கஜானி<br>பிரதீபன்சர்மா மிருத்வி<br>செந்தூரன் லதாங்கினி<br>பிரதீபன் பிரணவி<br>சுகந்தன் மவி'கா<br>குணசீலன் அக்'தா | 02 | - | - | - |
| **38** | இசை குழு 02 | குழு 02 | சிவநேசகுமார் வர்சவி<br>சதீஸ் காவ்யா<br>சண்முகராசா அனோயா<br>தயானந்தன்<br>கிருஷத்வனி<br>சதீஸ்குமார் சகானா<br>ஜெயப்பிரகாஸ் ஸ்ருதி<br>சிவம் டிலக்ஷனா<br>சசீகரன் திசானா<br>சிவகுமார் விதுசாயினி<br>நிசலிங்கம் யாதவி | 02 | - | - | - |
| **02** | நடனம் தனி | 02 | சுபநேசகாந் சாதுரி | 01 | 02 | - | - |
| **03** | நடனம் தனி | 03 | றஜீபன் ஜதுஷா | 02 | - | - | - |
| **04** | நடனம் தனி | 04 | யோகசீலன் பானுஜா | 01 | 02 | - | - |
| **05** | நடனம் தனி | 05 | சதீஸ்வரன்<br>அருணாங்கை | 01 | 02 | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- ➢ மாகாணக்கல்விப் பணிப்பாளர் வாழ்த்துச் செய்தி v
- ➢ பிரதிக்கல்விப் பணிப்பாளர் வாழ்த்துச் செய்தி vi
- ➢ அதிபரின் வாழ்த்துச் செய்தி vii
- ➢ மன்றப் பொறுப்பாசிரியர் இதயத்திலிருந்து viii
- ➢ தலைவரின் உள்ளத்திலிருந்து ix
- ➢ இதழாசிரியரின் இதயத்திலிருந்து x
- ➢ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி தமிழ்மன்றம் -2025 xi
- ➢ தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் - 2025 xii

1. எம் தமிழ்மொழி 1
2. உலகினை வழிநடத்த அன்பினால் போஷியுங்கள் 6
3. கர்நாடக சங்கீதமும் இன்றைய சூழலும் 10
4. சுமைகளை வெல்வோம் 12
5. கல்வியின் பெருஞ்சிறப்பு 14
6. எது அன்பு? 16
7. பாரதிகண்ட இலட்சியப் பெண் 18
8. முயற்சித்துப்பார் 20
9. சிரிப்பு சிறந்த மருந்து 23
10. நட்பு – நெஞ்சின் நிழல் 25
11. தாயின் சிறப்பு 26
12. சிறுவர் பாடல் 28
13. உழவுத் தொழிலின் பெருமை 29
14. அம்மா 31
15. கர்ணனும் கர்மாவும் 32
16. புதுக்கவிதை 34
17. உலகலாவிடும் தமிழ் 35
18. மரங்களை வளர்ப்போம் 37
19. வாசிப்பும் அறிவு வளர்ச்சியும் 38
20. வீழ்வதெல்லாம் எழுவதற்கே 41
21. உன் உயர்வு உன் கையில் 46
22. என் ஆசான் 47
23. ஊழ்வினை வந்துறுத்தும் 48
24. மாணவர் ஆரோக்கியமும் உடற்சுகாதாரமும் 50
25. வலி நிறைந்த வாழ்க்கை 51
26. புதிய கல்விச் சீர்திருத்தம் 55
27. பணிவே உயர்வு தரும் 56
28. தமிழ்மொழி 58
29. தமிழின் சிறப்பு 59
30. உயர்வு உன் கையில் 60
31. ஒழுக்கம் 62
32. நான் விரும்பும் நூல் 63
33. மரங்களைப் பாதுகாப்போம் 65
34. கடற்கரையில் ஒரு பொன் மாலைப்பொழுது 67
35. எனது இலட்சியக் கனவு 68
36. தமிழ்மொழியின் சிறப்பு 69
37. நானும் ஒரு மாணவியாக 70
38. சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம் 72
39. மருந்துப் பாவனை தொடர்பான விழிப்புணர்வு 75




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்



**செல்வி. சுமதி கந்தசாமி**

SLPS

B.A.(Hons),PGDE,M.Ed,PGDEM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் குழுமம் - 2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப்பாட ஆசிரியர் குழாம் - 2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க்குழு - 2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தமிழ்மொழி !!!

காதொளிரும் குண்டலத்தாள் கனிமொழியாள் வாழ்க
கைக்கு வளையாபதி கொள் கன்னிகையாள் வாழ்க!
மேதகு மென்மார்பிடை சிந்தாமணியாள் வாழ்க
மின்னுமணி மேகலை சூழ் மெல்லிடையாள் வாழ்க!
சீதமலர்ப் பாதமொலி சிலம்புடையாள் வாழ்க
சேரசோழ பாண்டியர் தம் செல்வமகள் வாழ்க!
நீதியுறு செங்கோலாய்த் தூயகுறள் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ்த்தாய் நீடுழி வாழ்க!

தமிழ்மொழி பண்டையது. நலம் சிறந்தது. உயர்நிலையில் உள்ளது. “இது போன்ற திராவிட மொழி வேறு எதுவுமில்லை” என்கிறார் கால்டுவெல். “தென்னிந்திய மொழிகளுள் பழமையானதும் பண்பட்டதும் தமிழ்மொழியே” என்கிறார். சீனிவாச ஐயங்கார். இதன் தொன்மைச் சிறப்பினை நயந்து

**“தென்னவன், சேரன், சோழன் செம்மையிலே வளர்ந்த திருவே**
**புகழ் மிகுந்த மன்னும் குமரிமுதல் பனிமலை மட்டும் வாழ்ந்த வாழ்வே**
**மன்னும் குமரிமுதல் பனிமலை மட்டும் வாழ்ந்த வாழ்வே**
**சீர்பெறு முத்தமிழே தெவிட்டாத புத்தமிழே**
**புது வாழ்வு காட்டிடும் திருக்குறள் பூத்த பூம் பொழிலே**
**உனை என்ன சொல்லி வாழ்த்துவேன்.”**

எனப் பாடுகிறார் பாரதிதாசன். அத்தகு தொன்மை வாய்ந்த தமிழானது பெருமளவு இலக்கியக் கருவூலங்களையும் சந்தேகத்திற்கு இடமற்ற மிக்க வளமான புராதன சொல்வடிவ வேறுபாடுகள் பலவற்றையும் கொண்டு விளங்குவதால் மூத்த மொழிகள் பலவற்றில் முதன்மையாகத் திகழ்கிறது. உலகப் பொதுமறையாய் திருக்குறள் உட்பட எண்ணிறந்த உயரிய நூல்கள் தமிழில் பண்டைக்காலம் தொட்டு இயற்றப்பட்டுவந்தன. இயற்றப்பட்டு வருகின்றன. இவற்றால் “**முச்சங்கத்து அரியணை ஏறி மன்னர் முடி தொட்ட மூவரும் அடி தொட்டுப் போற்ற ஏதமில் தமிழன்னை இனிது நடைபயில்கின்றாள்**” இன்றுவரை நன்கு.

இக்கட்டுரை தமிழ்த்தாய்க்கு புகழ் ஆரம் சூட்டும். முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக்கண்ணெதிரே காட்டிநிற்கும். இதனூடாக தமிழ்த் தாயைப் போற்றக் கிடைத்திருப்பது பெரும் பேறே. எங்கும் எதிலும் தமிழ் தமிழ் தமிழ். “**இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு இன்பந் தரும்படி வாய்த்த நல் அமுது**” எனில் மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமிழ்தின் இனிய தமிழ்: அகத்தியர் தந்த தமிழ்**
**தமிழர் மொழியான தமிழ் சங்கம் இருந்தாண்ட தமிழ்**
**புலவரெல்லாம் போற்றும் தமிழ் புகழ்பாட உகந்த தமிழ்**
**அன்னை தந்தை தந்த தமிழ் ஆசிரியர் சொன்ன தமிழ் என்தமிழே**
**என்தமிழே என்ன சொல்லி உன்னைப்பாட**

தமிழ்மொழி வரலாற்றுச் சிறப்புமிக்கது. இன்ன காலத்தில் தோன்றியது என வரையறுத்துச் சொல்லமுடியாது **"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தமொழி"** பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னர் நிறுவிய பைந்தமிழ்ச் சங்கங்கள் மூன்றிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் எமது மொழியாகிய தமிழ்மொழி செங்கோலோச்சி பெருஞ்சிறப்பும் பெருமையும் கொண்டு விளங்கியது என்பதற்கு அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் இலக்கணநூல்களும் சான்றாக உள்ளன. தமிழ்மொழி இலக்கிய வளத்தாலும் இலக்கணச் சிறப்பாலும் ஈடும்எடுப்புமில்லாத உயர்மொழி. **சிந்தையிந் தேனமுது ஊறி – நாவில் தித்தித்துத் தித்தித்துச் செவிவழி ஏறி வந்து கனிந்து இருள் கீறி எம்மை வாழ்விக்கும் மொழி எம் தமிழ்மொழி.**

இத்தகு சிறப்பு மிக்க தமிழ்மொழியில் அறிவு வளர்ச்சிக்கும் ஆன்ம நலத்திற்கும் சாதனமாகிய நூல்கள் தமிழ்மொழியில் சாலச் சிறந்து விளங்குகின்றன. **"பண்டைய இயற்கை வளங்கள் எல்லாம் பத்துப் பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து மண்டமெலங்கும் கமழும் அருந்தமிழ் வாசம் நுகர்ந்து மகிழ்வேமே"** எனப் பெருமை பாராட்டுகின்றனர்.ஆதியில் அகத்தியர் தொட்டு இன்றைய பாரதிவரை அருளிய அருஞ்செல்வ இலக்கியக் கருவூலங்களால் தமிழ் தரணியெங்கும் தளராத நிலையில் நடைபோடுவது ஒரு சரித்திரம்.**"அறிவு நிரம்பிட வேண்டில் - உண்மை அன்பும் அருளும் அடக்கமும் வேண்டில் உறுதிப் பொருள் பெற வேண்டில் - எங்கள் ஒண்டமிழ் நூல்களை ஓதிடுவீரே"** என்று மார்தட்டுகின்றனர் தமிழ்ப்புலவர். நாம் பழந்தமிழ் நூல்களைக் கற்றல் வேண்டும். காலத்திற்கேற்ப புதிய புதிய நூல்களைத் தமிழில் ஆக்கி தமிழை வளம்படுத்த வேண்டும். தேனமுதத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

**உண்மை மிக்க கீரனார்**
**உரை வகுத்த தமிழ்மொழி**
**ஊக்கமுள்ள வீரர் தம்மை**
**ஆக்குகின்ற தமிழ்மொழி**
**வண்மைமிக்க பாண்டியன்**
**வளர்த்த செந்தமிழ் மொழி**
**வள்ளுவன் குறளைப் போல**
**வாழ்க நீடுவாழ்க.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மிகப் பழைய மொழிகள் எனக் கருதப்படுகின்ற இலத்தீன், அராபி, சீனம் முதலான மொழிகளுள் பலமொழிகள் உலக வழக்கிலிருந்து இறந்தொழிந்தன. ஆனால் தமிழ் மொழி இன்றும் இளமைநலம் சிறிதும் குன்றாமல் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் நின்று விளங்குகின்றது.

**"பொருப்பிலே பிறந்து தென்னவன் புகழிலே கிடந்து**
**சங்கத் திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை**
**நெருப்பலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து**
**ஒர்ஏன மருப்பிலே பயின்ற பாவை மருப்பிலே வளருகின்றாள்"** எனவும்

**"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்**
**எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்**
**கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுதும்**
**உன் உதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்**
**ஆரியம் போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையா உன்**
**சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே."**

எனவும் விளங்கும் கவி வரிகள் **"எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழ் அணங்கு"** எம் அன்னைத்தமிழ் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன. *எனவே தான் அமரகவி பாரதியார்*

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**
**பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்**
**இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு**
**நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு**
**வாழ்ந்திடும் நன்றோ சொல்வீர்**
**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்** எனப் பாரதியாரும்

**"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசு பொழியும் பாலும் - தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்**
**இனியன என்பேன் எனினும் - தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்**

**செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்**
**தேக்கிய கறியின் வகையும்**
**தன்னிகர் தானியம் முதிரை – கட்டித்**
**தயிரோடு மிளகின் சாறும்**
**நன் மதுரஞ்செய் கிழங்கு – காணில்**
**நாவில் இனித்திடும் அப்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன்னை வளர்ப்பன தமிழா – உயிரை**
**உணர்வு வளர்ப்பது தமிழே"**

எனப் பாரதிதாசனும்

தமிழை, அதன் இனிமையை வியக்கின்றார். "**தென்திசை தனிற்பிறந்து தென்னவர் மடி தவழ்ந்து நாவலர் பாவலர் நாவில் நர்த்தனம் ஆடி உலகெங்கும் உலா** வருகின்றது நம் தமிழ். "**இயல் இசை நாடகமாய் எங்கும் நிறைதமிழ் எண் தமிழே முத்தமிழே இனிதான செந்தமிழே உன் இனிமை மொழியினை யான் என் சொல்லிப் பாடுவேன்.**"எனத் தவிக்கிறார் மற்றொரு புலவர். வாழ்க தமிழ். வாழ்க தமிழின் இனிமை

**"கவின் பொலியும் மலர்த்தேனோ கன்னல்தரும்**
**இன்சுவையோ கவலைபோக்க**
**செவிமடுக்கும் இசைக்குரலோ தென்பொதிகைத்**
**தென்றலிதோ தேன் மணக்கும்**
**கவிதை தரும் இன்பமிதோ கனிச்சாறோ**
**இல்லையிலை கண்மணி நீ**
**நவில் மழலைச் சொற்களெலாம் நற்தமிழின்**
**சுவையொக்கும் நற்குழந்தாய்"**

என அதன் இனிமை இனிது விளங்க வைக்கப்படுகின்றது. தமிழ் என்னும் பெயரே இனிமை என்னும் பொருளில் அமைந்துள்ளது. "**இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.**" தமிழை வியக்கின்றார் மற்றொருவர்.

**"வெந்தழலும் நீராகும் வெள்ளெலும்பு பொண்ணாகும்**
**வந்தமத வேழம் வணங்கிடுமே – சந்தமெழுப்**
**பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு**
**நீடுலகில் உண்டோ நிகர்"**

எனும் கவிவரிகள் தமிழின் இனிமையைப் பறைசாற்றுகின்றன. சொல்லினிமை, பொருளினிமை, ஓசை இனிமை, இலக்கண இனிமை, இலக்கிய இனிமை என பல இனிமைகள் நிறைந்த இனிமைத் தமிழ் மொழி நமதாக இருப்பது நமக்கு பெருமையன்றோ.

**"ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும்**
**இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும்**
**கிரேக்கம் இசையின் மொழி என்றும்**
**இத்தாலியி காதலின் மொழி என்றும்**
**பிரெஞ்சு தூதின் மொழி என்றும்**
**கூறுவது ஒரு புடையொக்குமெனின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் இரக்கத்தின் மொழி – பக்தியின் மொழி**
**எனக் கூறுவதும் இனிது பொருந்தும்''** என்கிறார் தனிநாயகம் அடிகள்.

தமிழ்மொழி மீது தமிழர்க்கு அளவற்ற பற்றுண்டு. தமிழர் தம் தாய்மொழியைக் குறிக்கும் போதெல்லாம் ஓர் அடைமொழி கொடுத்தே கூறுவர் தேன்மொழி என்றும் தீந்தமிழ் என்றும் கூறி அதன் இனிமையைப் புலப்படுத்துவார். பைந்தமிழ் எனப் பெயரிட்டு அதன் இளமைத் தன்மையைத் சுட்டுவார். செந்தமிழ் என்று அழைத்து அதன் செம்மையைக் குறிப்பர்.

**''தமிழ் எங்கள் உயிர் என்பதாலே வெல்லும்**
**தரமுண்டு தமிழருக்கு புவிமேலே''**

**"செந்தமிழே உயிரே நறுந்தேனே**
**செயலினை மூச்சினை உனக்களித்தேன்."**

அவர்கள் தமிழ்மொழியை உயிராக உணர்வாகக் கொள்கின்றனர்: தமது உயிரை மூச்சைத் தமிழுக்கு அளித்தனர் என்பது இதனூடாக இனிது தெளிவாகின்றது. சீரும் சிறப்புமுடைய நமது தாய்மொழியைப் போற்றுவது நமது கடமையாகும்.

**"தமிழினைப் போற்றுதும் தாய்த்தமிழ் போற்றுதும்**
**தாயைச் சேய் பேணல் தலையறம்**
**நம்மெல்வர்க்கும் தாய் தமிழே ஆதலால்**
**தென்மொழி போற்றுதும் தீந்தமிழ் போற்றுதும்"**

**தென்திசை தனிற் பிறந்து தென்னவன் மடி தவழ்ந்து நாவலர் பாவலர் நாவில் நர்த்தனமாடி உலாவரும்** நம் தமிழ் காலமது வென்று கருத்தினில் நின்று பார்போற்ற பாங்காய் இனிதாய்ப் பங்கமின்றி பீடுநடை பயில நாமும் நாளும் பணிசெய்வோம்.

திருமதி கவிதா சந்திரகுமார்.
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தழிழ்),
மாகாணக் கல்வித்திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை வழிநடத்த அன்பினால் போஷிப்புங்கள்
## Nature with love to lead the world

சிறுவர்களை சிறுவர்களாகவே பாதுகாக்க
சிறுவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற
சிறுவர்களின் சிறந்த உலகினை உருவாக்க
வருடந்தோறும் "OCTOBER 01 உலக சிறுவர் தினமாய்
உரக்கவே பேசப்படும் நாளாய்
அகிலமே கொண்டாடும் நிகழ்வாய் அமைந்திருக்கிறது.

பெற்றோருக்குப் பிள்ளையாய்
பற்றுதல்கள் ஏதுமின்றி இப்பாரினில் வந்துதிக்கும்
குழந்தைகள் எப்போதும் குழந்தைகள் தான்.
மனதாலும், செயலாலும்
மணம் வீசும் நறுமலர்களாய்
உங்கள் தோட்டத்தில் மலர்ந்த
இன்றைய சிறுவர்கள் தான்
நாளைய உலகின் உன்னதமான
தலைவர்கள் மறந்து விடாதீர்கள்.

இறைவன் படைப்பினில் தேவதூதர்கள்
நல்ல மரத்தினில் விளைந்த நறுங்கனிகள்
நீண்ட நெடும் பயணத்தில் வரும் குளிர்சோலைகள்
இளங்காற்றினில் கலந்து வரும் மதுர கானங்கள்
வரண்ட நிலம் செழிக்க வந்து பொழியும் மழை மேகங்கள்
பிள்ளைச் செல்வமெனப் பேசும் பொற்சித்திரங்க
போற்றிப் பேணிட வேண்டாமோ?

இந்தச் சிறுவர்கள் சிகரம் தொட அச்சமில்லை.
கோபம் சண்டை யில்லை. போட்டி, பொறாமையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி வேடங்கள் எதுவுமில்லை
வஞ்சனைகள், சூதில்லை. வாதப் பிரதிவாதங்களில்லை.
உயர்வு. தாழ்வு பேதமில்லை
உண்மை சொல்லத் தயக்கமில்லை.
நாளை என்றொரு கவலையுமில்லை.
பெற்றோரைத் தாண்டிப் பெரிய உலகமில்லை
நன்மைக்கும், தீமைக்கும் அதிக வித்தியாசமில்லை.
வெற்றிக்கும் தோல்விக்கும் வேறுபாடு காண்பதில்லை.

உண்மையில் குழந்தைகள் உலகில்
அமுதமும் விசமும் ஒன்றுதான்
அடையாளம் காணத் தெரியாதவர்கள்
அதனால் தான் சொல்கிறேன்.
கற்றுக் கொடுங்கள். – காலத்தின் தேவையில்
பிஞ்சுப் பாதம் பதித்து நடக்க
விரல் பற்றிப் பிடித்து எழுதிட
மழலை மொழி பேசிட
கற்றுத் தந்ததைப் போல இப்போதும்
கவனமுடன் கற்றுக் கொடுங்கள்.

போலிகளை இனங்காண வேடதாரிகளை
வேஷம் கலைக்க
கயவர்களைக் கரையொதுக்க
காமுகர்களைக் கடந்து வெல்ல
வஞ்சகர்களை வென்று புறந்தள்ள
பொய்யர்களைப் புரட்டிப் புடம் போட
தீயவைகளை விட்டு விலகிட
நன்மைகளை தேடி அடைய
தோல்வியிலும் துவளாதிருக்க
ஏமாற்றங்களைச் சகித்துக் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றி வாழாதிருக்க
பிறரை ஏமாற்றி வாழாதிருக்க
வெற்றிப் படிகளை எட்டிப் பிடிக்க
ஏணிகளை எட்டி உதைக்காதிருக்க.
விழுந்தாலும் விதையாய் மறுபடி முளைக்க
தன் பாதை எதுவென சரியாய் தீர்மானிக்க
தொட்ட காரியம் எட்டிரும்வரை விட்டு விலகாதிருக்க
தன்னைப் போலவே பிறரையும் எண்ண
பிறர் உழைப்பைத் திருடாதிருக்க

உண்மைகளை உலகில் உரக்குச் சொல்லிட
நெஞ்சில் உரமுடன் நேர்படப் பேச
நேசம் கொண்டோரைப் போற்றிப் பேணிட
நம்பினோரை நட்டாற்றில் விடாதிருக்க
எதனை மறந்தாலும் மனிதம் மறவாதிருக்க
வேகம் இருந்தாலும் விவேகம் கொள்ள
முரண்பாடுகளுடன் சமரசம் செய்ய
முதுமைக்குத் தலை வணங்க
வறுமைக்கு சாவுமணி அடிக்க
முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி இடாதிருக்க
அறிவுத் தேடலுக்கு அணை போடாதிருக்க
அன்பினால் அகிலத்தைக் கட்டி ஆள

ஆண் பெண் பேதம் களைந்திட
இன்னும் இந்தச் சுற்றும்
பூமியில் வாழ்வை வளப்படுத்த
வல்ல விடயங்கள் எத்தனை உண்டோ
அத்தனையும் மறவாது கற்றுக் கொடுங்கள்.
ஏன் தெரியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சிறுவர்களுக்குள்.

ஒரு மதர் தெரேசா மறைந்திருக்கலாம்.

மகாத்மா காந்தியை காண நேரிடலாம்

கௌதம புத்தர் கைகுலுக்கலாம்

கார்ல் மார்க்கஸ் தத்துவம் பேசலாம்

நெல்சன்மண்டேலா நேசம் கொள்ளலாம்

பாட்டுக் கவிஞன் பாரதி பாடித்திரியலாம்

அணுவிஞ்ஞானி அப்துல்கலாம்

இங்கும் வரலாம் மாவீரன்

அலெக்சாண்டர் அகிலம் வெல்லலாம்

அதனால்தான் மீளவும் சொல்கிறேன்

கற்றுக் கொடுங்கள்.

அன்னையாய், தந்தையாய்

ஆசானாய் கற்றுக் கொடுங்கள்.

காலத்தை வென்று பெயர் சொல்லவும்

அன்பினால் அகிலத்தை வென்று ஆளவும்

கற்றுக் கொடுங்கள்.

**திருமதி சாந்தி நந்தகோபாலன் – BA(Hons)**
**ஆசிரியர்,**
**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக சங்கீதமும் இன்றைய சூழலும்

கர்நாடக சங்கீதம் என்பது தென்னிந்தியாவின் பாரம்பரிய இசைக் கலையாகும். இது ஆயிரம் ஆண்டுகால தொன்மையும், ஆழமான ஆன்மீக மற்றும் கலாசாரப் பின்னணியும் கொண்டது. சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகள் சியாமாசாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்ஷிதர் ஆகியோரின் பங்களிப்பால் செழுமைப்படுத்தப்பட்ட இந்தக் கலை வடிவம், இன்று நவீன காலத்தின் பல்வேறு சவால்கள் மற்றும் மாற்றங்களை எதிர் கொண்டு வளர்ந்து வருகின்றது.

**மரபின் மகத்துவம்**

கர்நாடக சங்கீதத்தின் அடிப்படை அம்சங்களான இராகம், தாளம், சுருதி ஆகியவை மிக நுட்பமான கணித மற்றும் உணர்வுபூர்வமான அமைப்பைக் கொண்டுள்ளன. க்ருதி, வர்ணம், கீர்த்தனை போன்ற வடிவங்கள் மூலம் பக்தியையும், வாழ்க்கைத் தத்தவங்களையும் இது வெளிப்படுத்துகின்றது. இதன் பாடும் பாணி, இசைக்கருவிகளிலும் பின்பற்றப்படுவது இதன் தனிச்சிறப்பு. இதன் தொன்மை, தூய்மை, தெய்வீகத் தன்மை ஆகியவை இன்றும் இதன் இரசிகர்கள் மற்றும் கலைஞர்களால் போற்றப்படுகின்றன.

**இன்றைய சூழலில் சவால்கள்**

சினிமா மற்றும் மேற்கத்திய இசையின் ஆதிக்கம், இன்றைய இளைஞர்கள் மத்தியில் சினிமா இசை மற்றும் மேற்கத்திய இசை வடிவங்களின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதன் காரணமாக பாரம்பரிய கர்நாடக சங்கீதத்தைக் கற்கவும், இரசிக்கவும் ஆர்வம் காட்டுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

மொழியின் சவால், கர்நாடக சங்கீதப் பாடல்களில் பெரும்பாலானவை தெலுங்கு, சமஸ்கிருதம், போன்ற மொழிகளில் உள்ளன. இதனால் தமிழ் பேசும் இரசிகர்களுக்கு பாடலின் பொருள் முழுமையாக புரியாமல், இராகம், மற்றும் தாளத்தை மட்டுமே இரசிக்கும் நிலை ஏற்படுகிறது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பிணைப்பு, குருகுல முறை மறைந்து, கல்வி நிறுவனங்கள், நிகழ்நிலை (online) வகுப்புக்கள் அதிகரித்துள்ளன. இதனால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான ஆழமான பிணைப்பு பாரம்பரியப் பயிற்சி முறை சவாலுக்குள்ளாகியுள்ளது.

சமூகப் பிளவுகள் குறித்த விவாதங்கள், கர்நாடக சங்கீத உலகில் ஆதிக்கம் செலுத்தும். சமூகப் பிரிவுகள் குறித்தும், அதன் சமூகப் பின்புலம் குறித்தும் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வெளியில் விமர்சனங்களும் விவாதங்களும் எழுந்துள்ளன. இது கலையின் உள்ளார்ந்த மதிப்புக்கு அப்பால் சமூக நீதிக் கண்ணோட்டத்தில் பார்க்கப்படவேண்டிய ஒரு சவாலாகும்.

இன்று கர்நாடக சங்கீதம் இலக்கமுறைத் தளங்கள் (Digital), சமூக ஊடகங்கள் மூலம் உலகெங்கிலும் உள்ள இரசிகர்களைச் சென்றடைகின்றது. வலையொலி (YouTube) போன்ற தளங்கள் கச்சேரிகள் மற்றும் பாடங்களைக் கற்கவும், கற்பிக்கவும் உதவுகின்றன. நிகழ்நிலை (online)வகுப்புக்கள் தூரத்தையும் கடந்து இசைப் பயிற்சியை சாத்தியமாக்கியுள்ளன.

சங்கமமும் பரிசோதனைகளும் (Fusion and Experiments) பல கலைஞர்கள் கர்நாடக சங்கீதத்தை மேற்கத்திய இசை போன்ற பிற இசை வடிவங்களுடன் இணைந்து, புதிய இசைப் படைப்புக்களை உருவாக்குகின்றனர். இந்த புதிய முயற்சிகள் பாரம்பரிய நவீன இரசிகர்களிடம் கொண்டு சேர்க்கின்றன.

தமிழில் கீர்த்தனைகள் இயற்றிய முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராஜர், மாரிமுத்தாப் பிள்ளை போன்ற தமிழ் மும்மூர்த்திகள் குறித்த விழிப்பணர்வும், தமிழிசை இயக்கமும் இன்று மீண்டும் வலுப் பெற்று வருகின்றன. இது தமிழிசைப் பாடல்களை மேடைகளில் அதிகம் பாட ஊக்குவிக்கின்றது. இராகங்களின் மருத்துவ மற்றும் மனநலச் சிகிச்சைக்கான நன்மைகள் குறித்த ஆய்வுகள் அதிகரித்து வருகின்றன.

கர்நாடக சங்கீதம் என்பது வெறும் பொழுதுபோக்கு அல்ல. அது ஒரு கலாசாரப் பொக்கிஷம். இன்றைய வேகமான உலகில் அது பல்வேறு சவால்களை எதிர் கொண்டாலும், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவதன் மூலமும், காலத்திற்கேற்ப புதிய முயற்சிகள் மற்றும் படைப்புக்களை உருவாக்கவதன் மூலமும் அதன் அடிப்படைத் தூய்மையைக் காப்பதன் மூலமும் அது தொடர்ந்து வாழும். பாரம்பரிய இசை அதன் நெகிழ்வுத் தன்மை மற்றும் காலத்தை வென்ற அழகின் காரணமாக, வருங்காலத் தலைமுறையினரையும் தொடர்ந்து ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

**"இசையால் உலகை வென்றிடுவோம்"**

**திருமதி சோதிமாலா கௌரீசன்**
**ஆசிரியர்,**
**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகளை வெல்வோம்

உண்மைகள் மறைக்கப்பட்டு உயிர்கள் பிரிந்தனவே
புண்ணிய பூமி சிதைக்கப்பட்டு சுடுகாடாய்த் தெரிகிறதே
எண்ணங்கள் ரணங்களாகி இதயத்தைக் குடைகிறதே
பண்ணிய பாவச்சுமை நிழலாய் எமைத் தொடர்கிறதே

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மனத்திலே
நித்திய வேதனை நிலைத்து நிற்கிறதே
பத்தியங்கள் பலசெய்தும் பயனேது மில்லையே
நித்திரையும் இன்றியே வாழ்விங்கு கழிகிறதே

பெண்களும் ஆண்களும் சுதந்திரமாய் நடமாட
மண்ணில் வழியுமில்லை மாறிவிட்டது சமுதாயம்
எண்ணம் போல்வாழ்க்கை வாழ்ந்திடலாம் என்றே
பண்ணும் பாவச்செயலோ நித்தமும் உயர்கிறது

போதையும் மதுவும் மாதுவும் மயக்கிட
தாதையின் பணமும் தெரியாமல் அழிந்திட
பேதையாய் அன்னையும் பேதலித்து அழுதிட
ஓதைக் குரல் அவலமாய் வீடுகளில் ஒலித்திட

இளவயதுத் திருமணங்கள் விவாகரத்தில் முடிந்திட
உளமுருகிப் பெற்றோரும் ஊர்வாய்க்கு அஞ்சியே
உள்ளச் சுமைகொண்டு பொறுமை காத்திட
கள்ளத்தனமான செயல்களால் காலம் கழிகிறது

எங்கள் பண்பாடும் பழக்கங்களும் மாறிப்போச்சு
தங்கள் எண்ணப்படி உணவுகளும் உண்ணலாச்சு
தமிழர்தம் கலாசாரம் தலைகீழாய் மாறிப்போச்சு
இழவிலும் கலகலப்பாய் இருப்பதே வழக்கமாச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையாய் காத்திட்ட கல்வியும் ஒழுக்கமும்
விலைக்கு விற்கும் பொருள்களாய் ஆகிறதே
விலைபேசிப் பிள்ளைகள் குருவைத் தேடிடும்
நிலைமைகள் இப்போது கல்விக்கும் வந்ததே

தொழில்நுட்ப வளர்ச்சியால் மாணவரின் புலன்நாட்டம்
எழில்நாடியே அலைகிறது எல்லாவித தேவையிலும்
தொழில்புரிய விருப்பமில்லை சும்மாவே இருக்கின்றார்
பொழில் நிறைந்த பூக்கூட்டம் தம்மால் சிதைகிறதே

அன்பில்லை வீட்டில் அரவணைப்பும் குறைகிறது
இன்பவாழ்வு வாழ்வதாய் வெளித்தோற்றம் தெரிகிறது
சின்னஞ்சிறு பிரச்சினைகள் பெரிதாக மலர்கிறது
கன்னங்களில் வாழ்வோரின் கதைக்கும் இடமாகிறது

எப்போதும் சாலையில் விபத்துக்கள் நடக்கிறது
நாளாந்தம் புலர்பொழுதில் சாவுக்குரல் ஒலிக்கிறது
வாழ்க்கை பலரது உணர்ச்சிகளைக் கோடிடுகிறது
தப்பாமல் எல்லோர்க்கும் நிச்சயமிவை நடக்கிறது

வாழும் காலத்தை வளமாக்க முயற்சிப்போம்
தாழும் உணர்வுகளைத் தள்ளியே வைத்திடுவோம்
நீளும் சுமைகளை நிதர்சனமாய் எதிர்கொள்வோம்
வீழும் போதெல்லாம் விறலோடு எழுந்திடுவோம்

நாளைய தலைமுறையை காத்திடத் துணிந்திடுவோம்
வேலைகள் அறிந்துகொண்டு விடலையரைச் சீர்செய்வோம்
சுமைகள் எல்லோர்க்கும் உண்டென உணர்த்திடுவோம்
அமைதியாய் அவை வெல்லும் வழிகளை மொழிந்திடுவோம்

திருமதி நவமணி ராஜ்குமார்
ஆசிரியர்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் பெருஞ் சிறப்பு

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" இது திருவள்ளுவர் வாழ்மொழி. எண்ணும் எழுத்தும் கல்வியைக் குறிக்கின்றன. இவ்வுலகில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் உண்மையான கண் கல்வியே. இதுவே இக் குறளின் சுருக்கமான கருத்து. மக்களுக்கு இரண்டு கண்கள் உண்டு அவற்றால் குறிப்பிட்ட தூரம் வரையே பார்க்க முடியும் அவற்றுக்குப் பல நோய்கள் உண்டாகலாம்.

கல்வி கற்ற மக்களுக்குக் கல்வி என்னும் கண் உண்டு. அந்தக் கண்ணால் உலகெங்கும் நட்பனவற்றைப் பார்க்கலாம். இறந்தகால, நிகழ்காலச் சம்பவங்களைத் தெரிந்து கொள்ளலாம். எதிர்காலத்தில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் ஊகித்து உணரலாம். எனவே கல்வி எனும் கண்ணே மிகச் சிறந்த கண். இந்த உண்மையைத் திருவள்ளுவர் "கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்கிறார்.

செல்வம் நிலையற்றது. "செல்வோம் செல்வோம்" எனக் கூறிக்கொண்டிருக்கும். கல்வி நிலையானது. ஒருவனுக்குத் துன்பம் தராத சிறந்த செல்வம் கல்விச் செல்வமே ஆகும். ஏனைய பொருட் செல்வங்கள் யாவும் சிறந்த செல்வங்களாகமாட்டா என்பதே இக்குறள் தரும் கருத்தாகும். கல்வி அழியாத செல்வமாகும். செல்வம் கள்வராலும் பகைவராலும் பிறராலும் திருடப்படும் கல்வியை எவரும் திருடமுடியாது. செல்வம் வெள்ளத்தாலோ, கொடிய நெருப்பாலோ அழிக்கக் கூடியது. ஆனால் கல்வியோ எவற்றாலும் எப்போதும் அழியாச் செல்வமாகும். கல்வியோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே போகும். எனவே மனிதன் தேடக்கூடிய மிக உயர்ந்த செல்வம் கல்வியே! இவ்வுண்மையைத் திருவள்ளுவர் மிகச் சுருக்கமாக "கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு மாடல்ல மற்றையவை" எனக் கூறுகின்றார்.

மக்கள் அறிவு வளர்ச்சியை உடையவர்கள். விலங்குகள் அறிவு வளர்ச்சியற்றன. மக்கள் கற்றவர்களாக வாழவேண்டுமாயின் அறிவு வளர்ச்சியை மக்களோடு வைத்து எண்ண வேண்டும். அப்படியில்லையென்றால் கல்லாதவரை அறிவு வளர்ச்சியற்ற விலங்குகளோ வைத்து எண்ண வேண்டும் என்கிறார் வள்ளுவர். கற்றாருக்கு எந்தநாடும் அவருக்கு சொந்த நாடாகும். எந்த ஒரு ஊரும் அவருடைய சொந்த ஊராகும். அதனால் கல்வி கற்றவர் எந்த நாட்டிற்குச் சென்றாலும் பெருமையும் புகழும் பெறுவர் ஆனால் ஒரு நாட்டை ஆளும் அரசனுக்கோ அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே தான் பெருமையும் புகழும் உண்டாகும். இதனையே ஔவைப் பிராட்டியும் ''மன்னனுக்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' எனச் சுட்டியுள்ளார். அமுதத்தமிழ் தந்த ஔவைப் பிராட்டியும் தமது ஆத்திசூடியில் ''வித்தை விரும்பு'' என்றார். வித்தை என்பது ஔவையின் கருத்து மற்றும் கல்வி ஆகும். ''கல்வியை விரும்புவாயாக'' என்பது ஔவையின் கருத்து. கல்வியே அழிவற்ற செல்வமாக இருப்பதால் அதனை விரும்பவேண்டும் என்கிறார்.

''கல்வி அழகே அழகு'' என்றுரைக்கின்றது. நாலடியார். ''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்று வலியுறுத்துகிறது வெற்றி வேட்கை. இந்நூல்கள் எல்லாம் கல்விச் செல்வமே சிறப்புடையதென்றும் அதனைத் தேடிக் கொள்வதே மக்கள் தம் தலையாய கடமையென்றும் மணலான இடங்களில் கிணறு தோண்டுகிறோம். எவ்வளவு ஆழமாகத் தோன்றுகிறோமோ அதற்குத் தக்க நல்லநீர் ஊறிக்கொண்டே இருக்கும். அது போல் நல்ல நூல்களைப் படிக்கும் தோறும் அறிவு வளர்ந்துகொண்டேயிருக்கும். இவ்வுண்மையைத் திருவள்ளுவர் ''தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு'' என்றுரைத்துள்ளார். நூல்களைத் திரும்பத் திரும்ப ஆழமாகப் படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே செல்லும். இளமையிற் கற்பதோடு நின்றுவிடாது ஒருவர் வாழ்நாள் முழுவதும் இறக்கும் வரை கற்றல் நல்லது. ''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'' என்கிறது முதுமொழி. கல்வி கற்றவர்களே மனிதர் எனச் சிறப்பித்துக் கூறும் தகுதியுடையர். ஏனையோர் விலங்குகளை ஒப்பர் என இழித்துக் கூறுவர். இக்கருத்தினை வள்ளுவர் ''விலங்கொடு மக்கள் அனையர், இலங்கு நூல் கற்றோடேனையவர்'' என அழகுறக் கூறுகிறார்.. சுருங்கக் கூறின் ஒருவனுக்குத் துன்பந்தராத அழியாத செல்வமாக விளங்குவது கல்வியே ஆகும். மற்றச் செல்வங்கள் யாவும் நிலையற்றவை. நிலையற்றவையை விடுத்து, ஏழு பிறவியும் எம்மோடு தொடரக் கூடிய கல்விச் செல்வத்தை மக்கள் நாடவேண்டும். மாணவராகிய நாம் கல்வியைக் கண்போற் கருதி நாள்தோறும் கற்று நல்லவர்களாக, கல்வி வல்லுநர்களாக வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**க. ஹர்ஸ்ணி**
**தரம் - 8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது அன்பு ....?

அன்பு செலுத்தப் படாமலும்
செலுத்தத் தெரியாமலும்
அலுத்துக் கிடக்கின்ற இந்நாளில்
வலுத்துக் கிடக்கின்ற வேதனைகள்
கழுத்துவரை தேக்கிக் கொண்டு
எடுத்துச் சொல்ல யாருமின்றி
தடுப்புச் சுவர்களாய்ப் பலரைக் கண்டு
வாழத் தலைப்படும் வாழ்வு இது

இந்நாளில் எது அன்பு
இந்நாளில் எது வேடம் - என
புரியாதிருப்பது பெருந்துயரம்
வாங்கிக் கொடுப்பதுவும்
பெற்றுக் கொடுப்பதுவும் அன்பில்
இரட்டைக் குழந்தைகளாய்
அன்பை கொடுப்பவர்க்கு
ஆற்றலுறு அன்பு

ஏங்கியிருப்போர்க்கு ஆதரவாய்
நாலு வார்த்தை பேசல்
ஆளுமையுறு அன்பு
மூத்தோர்க்கு உதவுதல்
முன் மாதிரியான அன்பு
எமை காத்தவருக்காய் இரங்குதல்
கடமை சேர் அன்பு
இதில் எது பேரன்பு

ஏற்றிவிட்ட ஏணிகளை
எறியாதிருத்தல் நன்றி சேர் அன்பு
தூற்றி விட்டோரையும் போற்றி
வாழ்தல் தூய்மையான அன்பு
ஏட்டிக்குப் போட்டியானோரையும்
புன்னகை செய்தல் தகைமை சேர் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொடுப்போரையும்
கட்டித் தழுவுதல் நாகரிக அன்பு

வளர்பவரைத் தட்டிக் கொடுத்தல்
வல்லமையுறு அன்பு
வசதி வாய்ப்பிலும் சகஜமாய்
பழகல் வஞ்சகமிலா அன்பு
பேதலித்த பெருவாழ்விலும்
பெருந்தன்மையோடு வாழ்தல்
புரிந்தவனின் அன்பு
அதுவே மனித அன்பு

சமமாக மதித்து வரமான
கல்வி கொடுப்பது உண்மை
ஆசிரியரின் அன்பு
அன்பை,பண்பை,உணர்வை,
உரிமையை,தெம்பை,தெரிவை,
தெளிவைத் தருவது
நம் ஆண்டவனின் அன்பு
இதிலே எது அன்பு

அட பொய்மை சேர நடித்து நுனி நாவில்
இனிமையாய் பேசல் மனித நடிகனின் அன்பு
எல்லாவற்றையும் புரிந்தொழுபவனே
மனிதனின் தூய்மையான அன்பு
பொய்யான அன்பு போதிக்காது
தர்மத்தை அதே போல்
மெய்யான அன்பு தாமதிக்காது
இன்பக் கடலை......

**சுதன் திருமகள்**
**தரம் - 13C**
**கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கண்ட இலட்சியப் பெண்

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மற்றும் இன்னல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து பெண் அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து போராடிய ஒரு வீரரே மகாகவி பாரதியார் ஆவார். இவர் பெண்ணியம் போற்றும் ஒரு சிறப்பு மிக்க மனிதராக வாழ்ந்தவர் ஆவார். மகாகவி பாரதியார் சமூகத்தை மாற்றி அமைத்து புதுமைப் பெண் என்ற வடிவத்தை பெண்களுக்கு வழங்கியவர் ஆவார். அந்தவகையில் இன்று பெண்கள் தலைநிமிர்ந்து பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கவும் காரணமானவராக பாரதியார் நிகழ்கின்றார்.

மகாகவி பாரதியாரின் காலப்பகுதியில் பெண் அடிமைத்தனமானது மேலோங்கிக் காணப்பட்டது. அதாவது ஆணாதிக்கமே இடம்பெற்றதோடு ஆண்களைப் போன்று கல்வியிலோ அல்லது வேலையிலோ ஈடுபடமுடியாத ஓர் அடக்குமுறைமையே பெண்களுக்கு நிகழந்தது. மேலும் அக்காலப்பகுதியில் சீதனக் கொடுமைகள் மற்றும் சிறுவயதுத் திருமணம் எனப் பல்வேறுபட்ட இன்னல்களுக்குப் பெண்கள் இலக்காகி வந்தனர். இத்தகைய சூழலிலும் பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவராக பாரதியார் காணப்பட்டதோடு தனது எதிர்பார்ப்பு, கனவு, குறிக்கோள் என்பவற்றின் ஊடாக புதமைப்பெண் என்ற கவிதையைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

''பெண்களானவர்கள் சமூகத்தில் சிறப்புமிக்கவர்கள்'' என்ற அடிப்படையில் பெண்மையைப் போற்றவது எம் அனைவரது கடமையாகும் என்பதனை எமக்கு எடுத்தரைத்தவர் பாரதியார் ஆவார். கல்வி உரிமை, ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் சமனாகப் மதிக்கப்படுவதற்கான உரிமை, விரும்பியவரை திருமணம் செய்து கொள்வதற்கான உரிமை எனப் பல்வேறு பெண் உரிமைகளை மக்கள் மனதில் நிலை நிறுத்திய பெருமை பாரதியாரையே சாரும்.

பாரதியார் தனது வேட்கை மற்றும் கற்பனை, எதிர்பார்ப்பு என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கிய ஒரு கற்பனை வடிவமே புதுமைப் பெண் எனும் வடிவம் ஆகும். அந்தவகையில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் இயல்புகளாக தலைநிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாமல் செல்லும் தைரியம், நிமிர்ந்த ஞானச் செருக்கு என்பன காணப்படுகின்றன. பெண்மையினைப் போற்றும் வகையில் புதுமைப் பெண் கவிதையானது பாரதியின் இலட்சியத்தையும் எடுத்துரைப்பதோடு இன்று பெண்கள் பல உயர் பதவிகளில் அங்கம் வகிப்பதற்கான அடித்தளத்தினையும் வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சமூகத்தில் பெண்களானவர்கள் கல்வி ரீதியாகப் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகின்றார்கள். அந்தவகையில் பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உரிமையே இன்று அவர்கள் பல துறைகளில் வேலை செய்யவும் தனது குடும்பத்தைச் சரியான முறையில் நிர்வகிக்கவும் வழி அமைத்துள்ளது. அதே போன்று இன்று பெண்களே எம் நாட்டின் கண்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறாகப் பெண்கள் சிறந்த முறையில் காணப்படுகின்ற போதிலும் இன்றும் சில இடங்களில் பெண் அடிமைத்தனமானது காணப்படவே செய்கின்றது. ஆனால் பாரதியார் கண்ட இலட்சியமானது எமது நாட்டினது பெண்கள் அவசியத்தை எடுத்துரைத்தது.

பெண்களும் ஆண்களைப் போன்றே உரிமை உடையவராக கருதப்பட வேண்டும் என்ற வகையில் பாரதி கண்ட இலட்சியத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வளவு ஏன்? இன்று எமது கல்வியில் அதிக அக்கறை செலுத்தும் கல்வி அமைச்சரே ஒரு பெண்ணே ஆவார். அந்தவகையில் ஒரு பெண்ணிடம் காணப்படுகின்ற திறமைகளை அறிந்து சமூகத்திற்கு தகர்த்தெறிந்து பெண்களைப் போற்றி அவர்களை மதித்து அவர்களுக்கு வேண்டிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து எமது கடமையைச் செவ்வனே செய்வோமாக.

**திரிக்ஷிகா திவாகரன்**
**தரம் - 7F**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சித்துப் பார்

கனவுகள் நனவாக...

நினைத்தவைகள் எல்லாம் நிஜமாக...

தடைகள் வழிகாட்ட தண்டனைகள் சவால் ஆக

ஓடு நீ நில்லாமல் ஓடு..

சீறிப்பாயும் அருவி போல்...

ஆனால் ஆரவாரம் இன்றி அமைதியாய்

உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

முட்டி மோதிக் கொண்டே இரு,

தடைகளும் அகலும்

தடுமாறிப்போய் விடாதே,

வாழ்கையில் என்றும்

தன்னம்பிக்கையுடன் போராடு,

வெற்றி உனதே...!

உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

தோல்விகளைக் கண்ட இதயத்திற்குத் தான்

வெற்றியின் அருமை புரியும்

உன்னால் முடியும் என்பது

உன் தாரக மந்திரமாய்

உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

விழுந்தால் தான் விதை முளைக்கும்

விதையாய் விழுந்திடு விடியும் என்றே

முழங்கி முயன்றிடு விருட்சமாய் எழுந்திடு...

இலட்சியம் கிட்டும் வரை விசுவரூபம் எடுத்திடு

உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

நேற்று என்பது முடிந்து போனது

நாளை என்பது நிரந்தரம் அற்றது

இன்று இந்த நொடி மட்டுமே

உனக்கானது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து உட்சாகமாய் தொடங்கிடு
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

நம்பிக்கை எனும் ஆயுதம்
உன்னிடம் இருக்கும் வரை
வெற்றி என்ற வார்த்தைக்கு
நீ தகுதி உடையவன்
முடிந்தவரை போராடு
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

சோர்ந்து போகாதே... நிமிர்ந்து நில்!
சிலிர்த்தெழு!
சிந்தனை செடிகளுக்கு உரம் கூட்டு!
உறக்கத்திலும் உயர்வே உன்
எண்ணமாகட்டும்
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

முடிவைத் தேடாதே....
முளையில் தேடு... முயன்று ஓடு
முடிவு விடிவுதான்
முடிந்தவரை முயன்றால் வெற்றிதான்
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

முயற்சியும் பயிற்சியும் உள்ளவனுக்கு
மலையை வளைப்பதும் இலகு தான்
தயக்கமே உனது தடங்கல்! தகர்த்தெறி...
தோல்வி தானே ஓடும்
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

முட்டி மோது முந்தித் தள்ளு
விடியும் உனது இரவு தான்
பலிக்கும் உனக்கு கனவுதான்
மனதில் பல சுமைகள்
பாதையில் பல தடைகள் தகர்தெறி
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் தடைக் கல்லானால்
துச்சமென எண்ணி அதை மைல் கல்லாக்கு
சமுத்திரமும் உன் கையில்...
உலகமே உன் விரல் நுனியில்...
நிலாவிலும் உலா வரலாம்
விண் மீனுக்கும் தூண்டில் போடலாம்
உன்னால் முடியும் முயற்சித்துப்பார்

**க.சலோமி**
**தரம் – 12C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு சிறந்த மருந்து

மனிதர்களது வாழ்க்கையில் சிரிப்பு மிகவும் அவசியமானது. சிரிப்பு மனிதனை இலகுவாக்கின்றது. மனிதனை ஆரோக்கியமாக வைக்கிறது. இன்றைய மனிதர்கள் ஓய்வு இல்லாது மனதில் பல கவலைகளையும் மனஅழுத்தங்களையும் சுமந்து கொண்டு வாழ்கின்றனர். நாம் வாய்விட்டுச் சிரிக்கும் போது நம் மனதில் அழுத்தங்கள் குறைகின்றது. சிரிப்பு என்பது எமது மனித உடலிற்கு தேவையான அரிய வகை மருந்தாகும். சிரிப்பதால் எமது உடலில் ஏற்படும் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும். மனநோய், இதயநோய் என்பன ஏற்படாமல் இருக்கும்.

சிரிப்பு பார்ப்போருக்கு ஏளனமாகத் தெரிந்தாலும் அதன் விளைவு மிகப்பெரியது. ஒருவர் சிரித்த முகத்துடன் நடந்து கொண்டால் அவரை விரும்பி அவருடன் பழகுவர். அவருக்குப் பல நண்பர்கள் சேர்வார்கள். சிரிப்பு ஒருவருக்கு நம்பிக்கையையும் ஆற்றலையும் ஊக்கத்தையும் தருகிறது. நமக்கு ஏற்படும் சோகம், மனக்கவலை போன்ற கொடிய உணர்வுகளை எளிதாகத் தடுக்கிறது. ஒரு சிறிய சிரிப்புக்கூட பாரிய பிரச்சினையைத் தடுக்கிறது. சில பேர் கூறுவர், சிரித்தால் ஆயுள் கூடும் என்று. ஆம், சிரிப்பு வாழ்க்கையை நீடிக்கும் சக்தி கொண்டது. சிரிப்பின் சிறப்பு என்னவென்றால் அது நமக்கு இலவசமாகக் கிடைக்கும் ஒரு மருந்து. இதனால் பக்க விளைவுகள் ஒன்றும் இல்லை. நம்மை தான் கிடைக்கும்.

எப்போதும் சிரித்தமுகத்துடன் இருப்பவர் நகைச்சுவை உணர்வு கொண்டவராகவும் எங்கு சென்றாலும் மகிழ்ச்சியைப் பரப்புபவராகவும் இருப்பார். இன்றைய உலகில் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் மனிதர்கள் வசதியாக வாழ்ந்தாலும் மன அமைதியை இழந்து வருகின்றனர். ஒரு வகையில் பார்க்கப் போனால் சிரிப்பது நாம் நமக்கே செய்து கொள்ளும் அன்பு ஆகும். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டு போகும் என முன்னோர் கூறியது உண்மை ஆகும். நம் மனதில் ஒரு நிம்மதியையும் சந்தோசத்தையும் ஏற்படுத்துகின்றது. நேர் மறையான நல்ல சிந்தனையை வளர்க்க உதவுகிறது. சிரிப்புத் தான் நமது வாழ்க்கையை வெற்றிகரமாக நடாத்திச் செல்லும் மனநிலையைத் தரும். மருந்துகள் உடல் வலிக்கு உதவும். ஆனால், மனவலிக்கு ஏற்ற மருந்து சிரிப்புத்தான்.

நம் முகத்தில் ஏற்படும் சிரிப்பு ஒருநாள் முழுவதும் நம்மை மட்டுமல்ல, நம்முடன் சுற்றியிருப்பவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும். ஆய்வாளர்களின் ஆய்வின்படி ஒவ்வொரு நாளும் நாம் ஒரு பத்து நிமிடம் சிரித்தாலே உடல் நலத்திற்கும் மனநலத்திற்கும் நன்மையாகும் எனக் கூறுகின்றார்கள். சிரிப்பதற்கு நாம் பெரும் முயற்சி எடுக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு மகிழ்ச்சியான திரைப்படம், நகைச்சுவையான உரையாடல், சிறுகுழந்தையின் செயல்கள் நமக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பை தரக்கூடியவை. சிரிப்பதனால் நம்மை நாமே நம்பிக்கையுடன் முன்னேற்றிச் செல்ல முடிகிறது. ஒரு குடும்பத்தில் அனைவரும் சிரித்துப் பேசி வாழ்வதால் அச்சிரிப்பு அக்குடும்பத்தில் அனைவரையும் ஒற்றுமையாகவும் சந்தோசமாக வைத்திருக்கின்றது.

சிரிப்பு சினிமா, நாடகம், நகைச்சுவை நிகழ்ச்சி போன்றவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றது. எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடிகர்கள் எனப் பலர் மக்களைச் சிரிக்க வைக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். சிலர் இயல்பாகவே சிரித்த சுபாபத்துடன் இருப்பர். சிலர் சிரிக்கமாட்டார்கள். நமக்கு சிலநேரங்களில் புது அனுபவங்கள்கூட சிரிப்பைத் தரும். குழந்தைகள் இயல்பாகவே சிரிப்பை உண்டாக்குகின்றார்கள். அவர்களுடன் சிறிது நேரம் விளையாடுவதும் பேசுவதும் எமக்குச் சிரிப்பை ஏற்படுத்தும். ஒருவரின் சிரிப்புக்கு மற்றவரின் மனதை மாற்றக்கூடிய வல்லமையும் உள்ளது.

சிரிப்பால் உறவுகள் வலுக்கின்றன. சிலநேரங்களில் சிரிக்கமுடியாது போகலாம். ஆனால், அதற்குப் பல மனநிலையைச் சீராக்க பயிற்சிகள் உண்டு. தியானம், மனநலப்பயிற்சி போன்ற பல பயிற்சிகள் உண்டு. சிரிப்பு என்பது ஒரு சிறந்த வரம். சிரிப்பை பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவருடைய பொறுப்பு. நம்மைச்சுற்றியுள்ள சூழலை சிரிப்புடன் ஒளிர வைக்கவேண்டும். சிரிப்பு என்பது மனிதனுக்கு கிடைத்த சிறந்த பரிசு, நம்பிக்கையின் அடையாளம். ஒருவன் எவ்வளவு கல்வி கற்றவனாக இருந்தாலும் நிறைந்த பணம் வைத்திருந்தாலும் மன அமைதி, நிம்மதி இல்லை என்றால் அவனது வாழ்க்கையை அவனால் சந்தோசமாக வாழமுடியாது. அந்த அமைதியைப் பெறுவதற்கு சிறந்த மருந்து சிரிப்பு ஆகும். சிரிப்பில்லாத சமூகம் வெறுமையாகவே இருக்கும்.

மனிதர்களான நாம் எமக்குவரும் துன்பங்களையும், துயரங்களையும், தடைகளையும் சிரிப்பால் கடந்து செல்ல கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் வெற்றி நம்மைத் தேடிவரும். சிரிப்பால் பிரச்சினைகள் விலகாது விட்டாலும் அதை எதிர்கொள்ளும் சக்தி கிடைக்கும். எனவே நாம் எல்லோரும் சிரிப்போடு எந்தச் சவால்களையும் எதிர்கொள்வோம்.

**பி.சோபிகாயினி**
**தரம் – 13C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு – நெஞ்சின் நிழல்

நட்பு என்பது நிழலல்ல
நீடிக்கும் ஒளி – நமக்குள் ஒவ்வொரு நாளும்
சில சொற்கள் பேசாமல் புரிந்து கொள்வது
சில கண்கள் பார்த்ததாலே துயரங்கள் குறைவது

சிரிப்பில்கூட துயர் உண்டு என்றால்
அதை உணரும் ஒரு தோழன் இருந்தால்
அதுவே வாழ்க்கையின் செல்வம்
அவனோடு போதுமே உலகம்!

பணம் இல்லை, பதவி இல்லை,
நட்புக்குள் வசதியும் இல்லை
ஆனாலும் மனதுக்கு சாந்தி கொடுக்கும்
அன்பு மட்டுமே நிரம்பி இருக்கும்

சொல்ல முடியாத சிந்தனையை,
கண் விழித்தவுடன் புரிந்து கொள்வான்,
நான் விழுந்தால் தோளாகி விடுவான்.
நான் வென்றால் பாராட்டும் நிழலாக இருப்பான்

அவன் பேசும் போது - வானம் நீலம்
என்பதும் மறந்து விடுவேன்,
அவனோடு நடக்கும் போது - பாதை
எங்கே என்றே கேட்க தேவையில்லை

நிறைய பேர் பாசத்தை அளக்க நேரம்
பார்த்தார்கள்
அவன் மட்டும் நேரத்தை மறந்து
பாசம் புரிந்தவன்

**சிவரூபன்.பவித்திரா**
**தரம் – 12**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் சிறப்பு

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளை விட்டுக் கொடுக்காத கண்கண்ட முதல் தெய்வம் தாய். நாம் செய்யும் குறும்புகளை மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் கடவுளால் எமக்கு தந்துள்ள பரிசுதான் தாய், தாயும் தந்தையும் இரு கண்களைப் போன்றவர்கள். அதில் ஒரு கண் செயலிழந்தாலும் நம்மால் சந்தோசமாக வாழ்ந்துவிட முடியாது.

"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற பெரியோர்கள் கூறுவர். சிறுவர்களாகிய நாம் தினமும் இறைவனின் அருளைப் பெற வேண்டுமாயின் தாயாகிய தெய்வ முகத்தவளின் காலில் விழுந்து வணங்கி விட்டு சென்றால் போதும்.

ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து ஒரு நல்ல நிலைமையை அடையும் வரை அவள் தாயின் பொறுப்பிலேயே வளர்கிறாள். குழந்தைப் பருவத்தில் தாயின் சொற்களை கேட்டு நடந்த எல்லோரும் வளர வளர தாயின் சொற்களைக் கேட்டு நடப்பதில்லை. ஆனால் தாயானவள் நாம் செய்யும் எந்தவொரு செயலிலும் மற்றவர்கள் குறை கண்டுவிடக் கூடாது என நினைப்பாள்.

தாயினை மதிக்காத எந்தவொரு ஜீவராசிகளும் பூவுலகில் நிம்மதியாக மனநிறைவோடோ வாழ்ந்து விட முடியாது. தாயிற்காக நாம் கோவில் கட்டுவதை விட அவள் எந்த இடத்தில் இருந்தாலும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவிக்கு பாத்திரமாகவே வைத்திருக்க வேண்டும். எந்தவொரு சிறந்த விடயத்திற்கும் தாயானவளே தலைவியாக இருப்பாள்

இப்போதெல்லாம் தாயினை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு தாய் எமக்கு அமைத்துத் தந்த வாழ்க்கையில் சந்தோசமாக வாழ்ந்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதுதான் இல்லை. நாம் எமது தாயை விட என்ன தான் பெரிய பட்டம் பெற்றாலும் தாய் எனும் சொல்லக்கு முன்னால் அது எல்லாம் தூசி போன்றன.

தந்தையானவர் வாள் என்றால் தாயானவள் அந்த வாளின் கூர்மை என்றே கூறலாம். ஒரு குடும்பத்தில் தாய் என்பவள் இல்லாவிட்டால் அந்தக் கடும்பத்தில் பொறுப்புத் தன்மை குறைவாகவே இருக்கும். தாயானவர் சமயலறையில் அவளது வாழ்க்கையைக் கழிப்பவளல்ல. எமது குடும்ப சந்தோசத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் அவளது வாழ்க்கையைக் கழிப்பவள்.

"உலகில் தாயின் இடம் உயர்ந்தது. எந்த ஓர் இடத்தில் தான் மிகவும் உயர்ந்த சுயநலமின்மையைக் கற்கவும் செயல்முறைப்படுத்தவும் முடியும். தாயன்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட மேலான அன்பு ஒன்று இருக்க முடியுமானால் இது இந்த உலகத்திலுள்ள எட்டாவது அதிசயம்'' என்று விவேகானந்தர் கூறியுள்ளார். தாயின் தாலாட்டு இசையை விட இவ்வுலகில் வேறெந்த இசைக்கும் இடம் கொடுக்க முடியாது.

பாடத்தை நாம் பாடசாலையில் கற்று விடலாம் ஆன்மீகத்தை கோயிலில் வளர்த்து விடலாம் ஆனால் ஒழுக்கத்தை தாயின் அரவணைப்பிலேயே கற்கலாம். சிறுசிறு வேலைகளில் கூட நம்மைப் புகழ்ந்து பாராட்டக் கூடிய தாயின் அன்பிற்கு நிகராக எந்தவொரு சக்தியும் இந்த உலகில் இருந்து விட முடியாது. நம்மை நண்பர்களாக நினைத்து பழகுபவர்கள் எம்மிடம் உள்ள குறையைச் சுட்டிக் காட்டுவார்கள். ஆனால் தாயானவளோ எமது குறைகளைக் கண்டறிந்து தீர்த்து வைக்கும் தெய்வப் பெண்ணாக விளங்குகின்றாள்.

ஒரு தாய் எம்மிடம் எதிர்பார்ப்பது பணத்தையல்ல அவளுடைய வளர்ப்பை பிறர் குறை சொல்லாதவாறு உள்ள நல்ல குணத்தைத் தான். தாயானவள் தனக்காக வாழ்ந்த வாழ்க்கையின் அளவு, எமக்காக வாழ்ந்த வாழ்க்கையின் அளவை விடக் குறைவானதாகும். பூவுலகில் கால்த்தடம் பதிக்கும் ஜீவராசிகள் அனைத்தும் தாயின் அரவணைப்பிலே வளர்ந்து வருகின்றன. வள்ளலார் அருளிய தவிர்க்க வேண்டிய பாவங்களில் தாய் தந்தையை மதிக்காமல் போனால் பாவம் என்று கூறியுள்ளார்.

நாம் தாயின் மனதை புண்படுத்துவது உலகில் உள்ள அனைத்துப் பாவங்களிலும் பெரியது. மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களில் கிருஷ்ண அவதாரமும் ஒன்று. அந்த அவதாரங்களில் சிறு பிள்ளையாக இருந்த போது தாயின் மீது அவர் வைத்த அன்புக்கு இணையாக இவ்வுலகில் எதுவும் இருக்காது.

சில மானிடர்கள் தாயின் சிறப்புப் பற்றி அறியாது தாயினை அவமதிக்கிறார்கள். உலகில் பொறுமைக்குப் பரிசு வாங்க வேண்டிய ஒரு பெண்மணியாக இருப்பது தாயானவளே. நாம் தாயிற்கு மிகப் பெரிய கடனாளி ஆகின்றோம். நமக்காக தாயானவள் அவளின் வாழ்க்கையை பறிகொடுப்பதற்கும் தயங்கமாட்டாள்.

கங்கா எனும் பசு பிருந்தாவனத்தில் வாழ்ந்த பசுக்களில் ஒன்று. அது ஒருநாள் புல் மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு புலி அதனைச் சுற்றி வளைத்தது. அதற்கு அந்த கங்கா எனும் பசு புலியிடம் தயவு கூர்ந்து ''புலியே உனது குழந்தை அங்கே தனியாக இருப்பாள். அவளிற்கு பசி எடுக்கும் அவளின் பசியைப் பால் கொடுத்து போக்கி விட்டு வருகிறேன்'' இது என் வாக்கு என்று பசு புலிக்கு வாக்களித்தது. இங்கே தெரிகின்றது தாயின் சிறப்பு புலிக்குக் கொடுத்த வாக்கை பசு மீறவில்லை.

**நாம் தாயானவளை பேணிக் காக்க வேண்டும்.**

**சாரவி வரதராசா**
**தரம் - 11B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்

சிறுவர் நாங்கள் இன்பமாய்
சிரித்து மகிழலாம் தினமும்
சின்னக்கதை பேசி எறும்பு போல
சுறுசுறுப்பாய் வாழலாம்

ஒற்றுமையாய் இருக்கலாம்
ஒழுக்கத்துடன் வளரலாம் பெருமையுடன்
பெரியோர் சொற்கேட்டு நடக்கலாம்
பெற்றோரை மதித்து இன்பமாய் வாழலாம்

பள்ளிக்கூடம் செல்லலாம்
பாடங்களை படிக்கலாம்
பண்புடன் நடக்ககப் பழகலாம்
பல்கலைகளைக் கற்றிடலாம்

பள்ளிக்கூடம் சென்று நாம்
ஆசிரியரை மதித்திடலாம்
சகநண்பியுடன் சந்தோசமாய்
நாட்களை கழித்திடலாம்

மாலை வேளை நாமும்
சிறிது நேரம் விளையாடலாம்
ஓய்வு கூட பெற்றிடலாம்
மகிழ்வாய் பொழுதை களித்திடலாம்

இயற்கை உலகினை ரசித்திடலாம்
அந்த இறைவனையும் போற்றிடலாம்
உயிர்களிடம் அன்பைக் காட்டிடலாம்
அவற்றினை வியந்தும் பார்த்திடலாம்

சிறுவர் நாமும் படித்திடலாம்
விந்தைகள் பல செய்திடலாம்
கலைகள் பலவும் கற்றிடலாம்
அதைக்கண்டு மனம் களித்திடலாம்

ஐசாக் நியுட்டன் எடிசன் போன்று
சாதனை பல செய்திடலாம்
விண்வெளி கோள்கள் சென்றிடலாம்
வாழ்வின் உச்சியைத் தொட்டிடலாம்

சுகந்தன் மவிக்ஷ்கா
தரம் - 09A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவுத் தொழிலின் பெருமை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்" என்கிறார் திருவள்ளுவர். அதாவது உலகத்துக்கு உழவு செய்து உணவளிக்கும் உழவர்களே சிறந்தவர். மற்றவர் எல்லோரும் அவரை வணங்கியே வாழ வேண்டும் என்று உழவின் பெருமையை கூறகின்றார்.

"சுழன்று ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழுந்தும் உழவே தலை" என்ற குறளில் வள்ளவர் இந்த உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் எல்லோர்க்கும் உணவளிக்கும் உழவுதெழிலே முதன்மையானது என்கிறார். இதன் மூலம் உழவின் முக்கியத்தவத்தை அறிய முடிகிறது. விவசாயிகளின் பொருளாதாரத் தேவைகளுக்கும் உழவே இன்றியமையாததாக உள்ளது. மேலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பேணவும் உழவுத் தொழில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

உணவு இல்லையென்றால் மனிதன் உயிர்வாழ முடியாது. விவசாயி "சேற்றில் கால் வைத்தால் தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும்" இந்த உலகம் பசியாற உழவே உதவுகிறது. பல உயிரினங்களுக்கு வாழ்விடத்தையும், உணவையும் வழங்குகின்றது. இயற்கை விவசாய முறைகள் மண் வளத்தைப் பெருக்குகின்றன. உழவுத் தொழில் ஒரு நாட்டை உணவு உற்பத்தியில் அடையச் செய்து நாட்டை வளம் பெறச் செய்கின்றது.

பண்டைய காலம் தொட்டே மக்களின் பிரதான தொழிலான உழவு இருந்தமையால் திருவள்ளுவர், ஔவையார், கம்பர் போன்ற புலவர்கள் போற்றிப் பாடியுள்ளனர். "உழுவார் உலகத்தார்க்கு அணி அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து" இந்த குறளில் வள்ளுவர் மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் உழவர்களே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி என்கிறார்.

ஔவையார் "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்" என்று உழவுவுத் தொழிலின் சிறப்பை பாடுகிறார். அதாவது உழவுத் தொழிலுக்கு மகாகவி பாரதியார் " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்கிறார். ஒரு நாட்டில் விவசாயம் நடைபெறவேண்டும். தொழில் வளர்ச்சியும் முன்னிலையும் இருத்தல் வேண்டும் என்று உழவின் சிறப்பைப் பாடுகிறார்.

விவசாயிகளின் நலன் பாதுகாக்க அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டும். உற்பத்தி பொருட்களின் கொள்முதல் விலை, விற்பனை விலை இரண்டையும் அரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிக்க வேண்டும். உழவுத் தொழிலுக்கு வேண்டிய வசதிகள், இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடை செய்தல், இயற்கை உரங்கள், விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டங்கள் போன்றவற்றை அரசு செய்து கொடுக்க வேண்டும். இவை போன்ற நடவடிக்கைகளால் உழவைப் பாதுகாக்க முடியும்.

"ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவும் இல்லை" என்ற வாக்கிற்கு இணங்க உழவுத்தொழிலை விட மகியமையான தொழில் எதுவும் இல்லை. நிலத்தைப் பயன்படுத்தி, உணவை உற்பத்தி செய்து ஏனையவரை பசியாற்றும் உழவுத் தொழிலின் மகிமை அறிந்து அதனை கண்ணின் மணியைப் போல் பாதுகாத்து உழவுத் தொழிலை உயர்த்துவோம்.

உழவுத் தொழிலையும், உழவர்களையும் போற்றிப் பாதுகாத்து வருவது நம் தலையாய கடமையாகும்.

**"உழவு இல்லையேல்**
**உணவு இல்லை"**

**பி. சகானா**
**தரம் - 7A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

ஆசை ஆசையாய் சுமந்து
அணுவணுவாய் வளர்த்து
அழகிய மழலையாய்
உலகிற்கு நம்மை அறிமுகப்படுத்தியதும்
உலகத்தை நமக்கு அறிமுகப்படுத்தியதும் அம்மா

உயிர்கள் மட்டுமல்ல
உயிரெழுத்துக்கள் உருவானதற்கும்
அம்மா என்னும் சொல்லே
ஆதியாய் அமைந்திருக்க கூடும்

மண்ணில் விழுந்த விதைகள் மரங்களாகும்
அன்னையால் பிறந்த நாம் மனிதர்களானோம்
எண்ணிலடங்கா உறவுகள் இங்கே இருந்தாலும்
மண்ணில் மகத்துவமான உறவு
அன்னை என்றால் அது மிகையாகாது

அன்னை அவளின்
அரவணைப்பு கிடைக்க பெற்றால்
விண்ணை முட்டும் இடியானாலும்
கண்ணை சிமிட்டும் கணத்தில் கரைந்து விடும்

**க. சஜிரா**
தரம் – 6C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ணனும் கர்மாவும்

மகாபாரதம் புகழ் பெற்ற ஒரு காவியம். இது பல நூற்றாண்டுகளாக பேசப்பட்டு வரும் காவியமாகும். அத்தோடு, மகாபாரதம் ஒரே வம்சத்தைச் சேர்ந்த இரண்டு சகோதர்களின் வழித்தோன்றல்களுக்கு இடையே நிகழும் யுத்தம் பற்றிய காவியமாகும். இதைப்பலரும் அறிந்ததே. அந்தவகையில் மகாபாரதத்தை அறியாதவர்கூட அதிலே வரும் கர்ணன் எனும் கதாபாத்திரத்தை அறிந்திருப்பர். ஏனெனில, கர்ணன் என்றாலே வள்ளல் என்று தான் பலர் மனதில் பதித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் கர்ணன் வாழ்கையில் கஷ்டப்பட்டவன் நட்புக்காக உயிர் கொடுத்தவன் மிகவும் நல்லவன் என்றெனல்லாம் தான் பலரும் பலவிதத்தில் கூறுவர் அது முற்றும் உண்மையேயாகும். அப்படிப்பட்ட மிக நல்லவனான கர்ணன்கூட செய்த தவறின் பலனை அனுபவித்தேயாக வேண்டும். என்பது உலக நியதி இதனையே கர்மா என்போம். அதன்படி இக்கட்டுரையில் கர்ணன் செய்த தவறையும் அதற்காக அவனுக்குக் கிடைத்த பலனையும் கூறுவோம்.

மகாபாரதத்தில் பாண்டு எனும் சகோதரனின் வழித்தோன்றல்களாக பாண்டவர்களும் திருதராஷ்டிரனின் வழித்தோன்றல்களாக கௌரவர்கள் என இரண்டு உடன்பிறவா சகோதர பிரிவினர்கள் உள்ளனர். அதிலே பாண்டவர்கள் இந்திர பிரதஸ்த நகரை ராஜபரிபாலனம் செய்து வருகையிலே ராஜசூய யாகம் செய்ய ஏற்பாடு ஆகியிருந்தது. அதற்காகக் கௌரவர்களின் மூத்தவனான துரியோதனன் அங்கு வந்திருந்தான். அப்போது அங்கே இருந்த கண்ணைக் கவர்ந்த படிக்கக் கதவுகளும் சிற்பவேலைகளும் கொண்ட அரண்மனையின் சபாமண்டபத்தைக் கண்டு வியந்தான்.

யாகம் முடிந்த பின்னர் அஸ்தினாபுரம் சென்ற துரியோதனனால் தூங்க முடியவில்லை. ஏனெனில், அவன் பொறாமைத்தீயால் துயரடைந்தவனாய் காணப்பட்டான். இதைக்கண்ட துரியோதனனின் மாமாவான சகுனி, யுதிஷ்ரனின்(தருமன்) ராஜ்யத்தை அடைய யுத்தமில்லா வழியைக் கூறினான். அதாவது யுதிஷ்ரனிற்கு சூதாட்டத்தில் விருப்பமுண்டு ஆனால் ஆடத்தெரியாது. அத்தோடு, ராஜகுலசாரப்படி அவனால் வரமுடியாது என மறுப்பு கூறவும் முடியாது. ஆகையால், யுதிஷ்ரனைச் சூதாட்டத்திற்கு அழைக்குமாறு யோசனை கூறினான்.

அதைப்போலவே யுதிஷ்ரனை அழைத்தான். அவனும் சூதாட்டப்பிரியத்தாலும் வியாசர் எச்சரிக்கையைத் தவறாகப் புரிந்து கொண்டாலும் அங்கு வர சம்மதித்தான். அவனும் அஸ்தினாபுரம் வந்தான். அங்கு சூதாடி ராஜ்யத்தையும் தன் சகோதரர்களையும் தன்னையும் இழந்து .இறுதியில் மனைவியான திரௌபதியையும் இழந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் துரியோதனன திரௌபதியை அரச சபைக்கு வருமாறு தனது பணியாளனிடம் சொல்லி அனுப்பினான். அவள் வர மறுத்த காரணத்தால் துச்சாதனிடம் அவளை இழுத்து வரும்படி கட்டளை இட்டான். அங்கு இழுத்து வரப்பட்ட திரௌபதி அப்போது அங்கிருந்தவர்களிலும் சரண் புகுந்த போதிலும் ஒருவரும் சரண் அளிக்கா பட்சத்தில் விகர்ணன் எனும் கௌரவ சகோதரன் அவளுக்காக நியாயம் கேட்டபொழுதில் கர்ணன், துரியோதனன் செய்தது தான் சரி எனக்கூறி துச்சாதனனைப் பார்த்து "அனைத்தையும் இழந்த பின் இவர்கள் மேல் உள்ள வஸ்திரங்களும் இப்போது சகுனி உடையதே. ஆகையால், பாண்டவர்களுடைய வஸ்திரங்களையும் அவர்களுடைய மனைவியான இவளுடைய துணியையும் பறித்து உடனே சகுனிக்கு தருவாய் துச்சாதனா" (1973, மகாபாரதம் ராஜாஜி வானதி பதிப்பகம்) என்றான்.

அவன் பாண்டவர் வஸ்திரங்களை எடுக்க சென்ற போது அவர்களே தங்கள் வஸ்திரங்களை தூக்கியெறிந்தனர் பின்பு திரௌபதியின் துணியை எடுக்கச் சென்றான் அவளால் எதுவும் செய்ய முடியாமல் திணறினாள். அங்கிருந்தவர்களும் அதைத் தடுக்காமல் அதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். துச்சாதனன் திரௌபதியின் துணியை இழுக்க, அது கிருஸ்ணர் கிருபையால் நீண்டு கொண்டே போனது. அதனால் மானபங்கப்படாமல் அவள் தப்பித்தாள். துச்சாதனன் பிறர் சொன்னதைச் செயற்படுத்தினான். ஆனால் அவனைத் தூண்டிவிட்ட கர்ணனே திரௌபதி துயரப்பட நேர்ந்ததற்கு காரணம். ஆகையால் தான் கர்ணனுடைய ஆடையைப் போன்ற கவசகுண்டலங்கள் தானம் என்ற போர்வையில் இந்திரனால் பறிக்கப்பட்டது. கர்ணனின் கவசகுண்டவங்கள் இந்திரனுக்குக் கர்ணனால் வழங்கப்பட்டது. இது மகாபாரதம் படித்த அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

இதன் மூலம் நாம் புரிந்து கொள்வது யாதெனில், அவரவர் தவறின் பலனே அவர்களது அழிவிற்குக் காரணமாகும் என்பதே உண்மை ஆகும். அத்தோடு, தானம் எனும் போர்வையில் அவனது கர்மா செயற்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் செய்யும் தவறுக்கான பலனை நாம் வாழும் காலத்திலே அனுபவித்து விடுகின்றோம். இதையே கர்மா ஊழ்வினை என்றெல்லாம் அழைக்கின்றோம். பொய்யாமொழிப்புலவரான திருவள்ளுவரும் ஊழ் என்ற ஒரு அதிகாரத்தை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'நாம் தவறு செய்வோமாயின் அதன் பலன் நாளை கிடைத்திடும்' என்பதே இதிலிருந்து வெளிப்படும் உண்மையாகும். கர்மாவிலிருந்து எவருமே தப்ப முடியாது என்பதை நினைவிற் கொண்டு வாழ்வோம்

**'ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று**
**சூழினுந் தான் முந்துறும்'**

**சு. சுபர்னா**
தரம் - 10C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கவிதை

செந்தமிழாம் எங்கள் மொழி
தமிழ் மொழியாம் தலைமுறையால் வந்த மொழி!
தத்துவத்தால் வாழ்க்கைமுறை சொன்ன மொழி!
பாரதிக்கே அமரவாழ்வு தந்தமொழி!
பாடலுக்கு அழகுதனை சேர்த்த மொழி!

ஔவைக்குச் சுட்டபழம் தந்த மொழி!
ஒருவனே தேவனென சொன்ன மொழி!
ஈரடியில் திருக்குறளாய் நின்ற மொழி!
இனிமையை இன்பமாக பகிரும் மொழி!
சோகத்தைப் போக்கி வைக்கும் பாச மொழி!
சொந்தம் கொண்டு நம்வாழ்வில் வாழும் மொழி!

உறவுகளை சேர்த்து வைக்கும் உண்மை மொழி!
உயிரோடும் மூச்சோடும் வாழும் மொழி!
காற்றினிலே கலந்தோடும் ஓசை மொழி!
காதலுக்கு உயிர் கொடுத்த அன்பு மொழி!
கண்ணகியின் சபதமாக வந்த மொழி!
காலமெல்லாம் நிலைத்திருக்கும் எங்கள் மொழி!
செந்தமிழே!

**சுரேந்திரன் அமிர்தா**
**தரம் – 7A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிவரும் தமிழ்

புவியாளும் மாந்தர் புலம் மொழி தீர, மதி கண்ட பேரொளி கதிரோனே, விதியின் வழிகாட்டி கதிரை எமக்கேற்றி, உணவைப் பரிமாறும் கதிரோன் ஒளி போல உலகில் முதன் முதல் தோன்றி வணிகத்துறை கண்டு புலவர் பலர் சேர்ந்து மூச்சபதம் வகித்து மூன்றாய் பிரித்து முத்தாய் வகுத்த எம் அடையாளமே எம் தமிழ் மொழி. இம்மொழி அமிழ்தென பழங்காலம் தொட்டு இன்று வரை ஆழமாக அறியப்பட்டே வருகின்றது. இதனால் தான் பாரதிதாசன் "தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று கூறியுள்ளார். தமிழ் மொழியின் அருமையும் பெருமையும் சொல்லில் அடங்கா சிறப்புடையன. தமிழ் மொழியின் இனிமை தெவிட்டாதது. அது அமிர்தத்திற்கு ஈடானது. இன்பத் தமிழை இயலென்றும், இசை என்றும், நாடகமென்றும் வகுத்து முத்தமிழ் எனப் போற்றினர்.

இது ஏனைய தேசங்களில் எவ்வாறு இருக்கிறது? என நோக்கினால் "நாற்றிசையும் சென்றிடுவீர் மேற்றிசை செல்வங்கள் கொண்டு சேர்ப்பீர்" எனும் பாரதியாரின் கருத்திற்கிணங்க இங்கு மேற்குலக நாடுகள் யாவற்றிலும் தமிழ் நடமாட்டம் இருந்தது என்பது அறியக் கூடியதாக உள்ளது. மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்கிடையில் தமிழ்த் தொடர்பு இருந்தமைக்கு இவ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. இவ்வாறாக வாழ்வு வாணிபம் சென்ற காரணங்களை முன்னிட்டு தமிழ் மக்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்திருக்கின்றனர். அங்கெல்லாம் தமிழ் பேசப்பட்டு வளர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனால் தான் அமெரிக்காவிலிருந்து அவுஸ்ரேலியா வரையிலும், ஐஸ்லாந்திலிருந்து ஆபிரிக்கா வரையிலும் தமிழ் மொழி பயணம் செய்கின்றது.

ஐரோப்பிய தேசங்களில் கல்வியும், பள்ளியும் தோன்றும் முன் நம் தேசங்களில் நூல்களும் சங்கங்களும் தோன்றின. பல்லாயிரம் நூற் செல்வங்களைக் கொண்டு எம் தமிழ் மொழி உலகப்பந்தின் சுழற்சியில் சுழன்று கொண்டிருக்கின்றது. எட்டுத் தொகை நூல்களையும் பத்துப்பாடல் நூல்களையும் அக இலக்கியங்கள் புற இலக்கியங்கள் என்பவற்றையும் ஏனைய தேசத்தவர்கள் நன்கு பகுத்தறிவார்கள். பாட்டன் இராவணன் எழுதியவை இராவண நூற்றொகுதிகள், கூத்து இலக்கியங்கள் என விரிந்து பரந்து செல்கின்றன. ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன் என்பன ஔவையார் இலக்கியங்களாகும். இவற்றை உலகத்தாரும் மொழி வல்லுநர்களும் நன்கு அறியப்பெற்று கொண்டாடி வருகின்றனர். மாணிக்கவாசகரால் அருளப்பட்ட திருவாசகம் ஜி.யு.போப் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டதன் பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் உட்பட பல ஐரோப்பிய மொழிகள் வல்லமை பெற்று மேலும் வலிமையடைந்தும், பண்பட்டும் கிடக்கின்றது.

இம்மொழியை மரபு ரீதியாக பெற்றதில், பேசுவதில், கவி வடிப்பதில், பாடுவதில், பொருள் அடி தேடுவதில், கற்பதில் நாம் தமிழனாய் இருந்து தன்னிகரில்லா பெருமை கொள்ளவேண்டும். ஜேர்மன் நாட்டில் நிலக்கீழ் அறையில் தமிழ் ஓலைச் சுவடிகள் இன்றும் வைத்துப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. இவை திருக்குறள், வானசாஸ்திரம் போன்றவையாகும். ஆனால் ஏன் எதற்குப் பாதுகாக்கப்படுகிறது? தமிழை என்றும் நினைவுகூறும் முகமாகவும், தமிழ் மரபை பேணுவதற்காகவும் இன்றும் தமிழுக்கான சான்றகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஐரோப்பாவில் பேராசிரியர் பரமான்டோவினால் தமிழ் டிஜிட்டல் பேரகராதி உருவாக்கப்படுகிறது. இப்படி ஐரோப்பாவில் தமிழ் அழகாக, ஆழமாக வேரூன்றி வருகிறது. கனடாவிலும் தமிழ் போற்றிக் கொண்டாடப்படுகிறது. சீனர்களும் கூட எம் தமிழ் மொழியின் வளத்தை பின்பற்றுகிறார்கள். செம்மொழி என்ற நிலையில் எம்மொழி தமிழ் உன்னதமானதே. உலகத்தின் பார்வையில் ஆழமானதும் கூட. அன்பானவர்களே உலகத்தில் மெதுவாக பேசப்பட்ட மொழி தமிழ். கூறியவர் அலெக்ஸ் கொலியர். ஏனைய நாடுகளில் தமிழ் மொழிகள் கண் போலக் காக்கப்படுகிறது. இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

ஏனெனில் இது எம்மொழி, எம் அடையாளம், எம்மரபு, எம் தமிழ், எம் முன்னோர்கள் அளித்த மரபு மட்டும் மொழியல்ல எம் பெற்றோரும் எமக்குள் விதைத்த விதை அடையாளம் எனும் எம் நம்பிக்கை எம் தமிழாகும். இனிவரும் காலங்களிலும் உலகம் எனும் பூமிப்பந்தில் உலகலாகிவிடும் தமிழாகும் என்பதில் ஐயமில்லை.

**கு. துக்ஷாஜினி**
**தரம் – 7B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களை வளர்ப்போம்

அட மானிடா!
மரம் வளர்ப்பது தான்
இல்லையே!
இருக்கும் மரத்தைப்
பாதுகாப்பாயா?

மரத்தை வெட்டி
விற்றவன்
ஏசி அறையில்
குளிர் காய்கிறான்

கூலிக்காக
மரம் வெட்டியவர்
குடிநீர் இன்றியும்
சுவாசிக்க நல்ல
காற்றின்றியும் அலைகிறான்

மரத்தை விட
பணமே பெரியதென்று
நினைத்தவன் இன்று
மழையின்றி
வாடிய பயிருடன்
மடிந்துவிடுகிறான்.

மரத்தை வெட்டும் போது
எனக்கென்ன என்று
நினைத்தவன்
நிற்க நிழலின்றி
தவிக்கிறான்.

மனிதா! மனிதா!
மரத்தை நட்டு
வளர்த்திடாமல்
வளமாய் நீயும்
வாழ்ந்திடுவாய்.

புரிந்து நீயும்
நடந்திடுவாய்
புத்தியுடனே
நடந்திடுவாய்
வளமாய் நாட்டில்
வாழ்ந்திடுவோம்

**ந. அக்கூஷயா**
**தரம் – 6A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பும் அறிவு வளர்ச்சியும்

'வாசிப்பு என்பது சிந்தனைக்கான உணவாகும்' என்று வோல்டேர் கூறியுள்ளார். அதன் படி மனிதனின் அறிவு தேடலுக்கு வழி காட்டும் முதன்மைச் செயல்களில் வாசிப்பு முக்கியமானது. கல்வியின் முதல் படியாகவும், அறிவை வளர்க்கும் ஆதாரமாகவும் வாசிப்பு அமைகிறது. இன்றைய அறிவு சார்ந்த யுகத்தில் தனி நபரின் வளர்ச்சிக்கும் ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கும் வாசிப்பு ஒரு அடித்தளமாக உள்ளது. இத்தலைப்பில் வாசிப்பின் முக்கியத்துவம், அதன் விளைவுகள், நடைமுறைப் பயன்பாடு மற்றும் நம்மால் எவ்வாறு வாசிப்பைப் பயனுள்ள வழியில் பயன்படுத்தலாம் என்பதை விரிவாக ஆராயலாம்.

வாசிப்பு என்றால் என்ன என்பதை நோக்குவோமாயின் அது மனித அறிவை வளர்க்கும் மிகமுக்கியமான செயலாகும். குழந்தையாய் இருக்கும் போது முதல் முறையாகக் கல்வியைக் கற்றுக்கொள்ளும் கணத்தில்தான் வாசிப்பின் பயணம் ஆரம்பிக்கிறது. எழுத்துக்கள் மட்டுமல்ல எண்ணங்களை உணர்வுகளை, அறிவையும் ஒரே நேரத்தில் உணர்ந்து செறிவாக பருகும் செயல். ஒருவரின் மனது மற்றும் அறிவு வளர்ச்சிக்கான கதவுகளை வாசிப்பு திறக்கிறது. ஒரு சிறுவன் முதல் பேராசிரியர் வரை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வாசிப்பு தன் முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது.

வாசிப்பின் வகைகளை நோக்குவோமாயின் முதலாவது அறிவியல் வாசிப்பு இது கண்டுபிடிப்புக்கள், ஆய்வுகள், மருத்துவம், இயல்பியல் போன்றவற்றில் அறிவைப் பெற பயன்படுகிறது. பண்பாட்டு வாசிப்பு இலக்கியம், கலை, சமூகம், வரலாறு போன்றவற்றின் அறிவைப் பெற பயன்படுகிறது. அடுத்து தொழிநுட்ப வாசிப்பு. இது தொழில்த்துறை சார்ந்த அறிவை மேம்படுத்தவும், வேலை வாய்ப்புகளுக்குப் பயன்படுகின்றது.

வாசிப்பின் முக்கியத்துவத்தை நோக்குவோமாயின் வாசிப்பு என்பது வெறும் பொழுதுபோக்காக இல்லாமல் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு வழியாகும். ஒரு புத்தகத்தை வாசிக்கும் போதுதான் அந்த எழுத்தாளர் கூறும் எண்ணங்களை நாமும் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றோம். நல்ல புத்தகங்களை வாசிப்பதன் மூலம் நம் எண்ணங்கள் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. மாணவர்கள் பாடப் புத்தகங்களை மட்டுமல்லாமல் பொது அறிவுஇ வாழ்க்கை முறைகள், ஆன்மீகம், அறிவியல், வரலாறு போன்ற பல்வேறு துறைகளிலும் வாசிப்பதன் மூலம் அறிவு விரிவடைகிறது. வாசிப்பு என்பது மனதை வளர்க்கும் ஒரு பயிற்சி என்பதே உண்மை.

அறிவு வளர்ச்சியில் வாசிப்பு மிகமுக்கிய பங்குவகிக்கிறது இதனால் அறிவின் அடிப்படை வாசிப்பில் தான் உள்ளது. ஒரு விடயத்தை நேரடியாகக் கற்றுக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத போது அதை வாசிப்பின் மூலம் அறிந்து கொள்ளளாம். இதுவே அனுபவம் இல்லாவிட்டாலும் அறிவு பெறும் வழியாகும். உதாரணம், வாசிப்பு நம்மை பல உலகங்களுக்கு அழைத்துச் செல்கிறது. நாம் செல்லமுடியாத இடங்களைப்பற்றிய தகவல்களை, நேரில் சந்திக்க முடியாத மக்களின் வாழ்கையை, புரிந்துகொள்ள முடியாத விடயங்களைஇ வாசிப்பின் மூலம் எளிதாக அறியலாம். இது நம் அறிவைப் பரப்பி, நம்மை மானிட நலம் மற்றும் சமூக நலன் குறித்து சிந்திக்கவைக்கிறது

இன்றைய காலத்தில் புத்தக வாசிப்புப் பழக்கம் மெல்ல மெல்ல குறைந்து வரும் நிலை காணப்படுகிறது. ஒரு காலத்தில் நூல்கள் மனிதனின் நெருக்கமான நண்பராக இருந்கன. ஆனால் தற்போது அந்த இடத்தில் தொலைக்காட்சி, தொலைபேசி, கணினி போன்றவை வந்துவிட்டன. இந்த மாற்றத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை வருமாறு எண்மயமாக்கல் சாதனங்கள் இவை கவனச் சிதறலுக்கான வலையாக பயன்படுகிறது. இவை மனிதரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. குறுகிய வீடியோக்கள் மக்களின் பொழுதுபோக்காக மட்டுமன்றி, தகவல் பெறும் ஊடகங்களாகவும் மாறிவிட்டன. இது வாசிப்பிற்கான ஆர்வத்தை தடுக்கிறது. அடுத்து புத்தகங்களுக்கான அணுகல் குறைவு இருந்த போதிலும் சில இடங்களில் நூலகங்கள் இல்லை அல்லது புத்தகங்கள் புதுப்பிக்கப்படாமல் பழைய நிலையில் உள்ளன. இதனால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வாசிப்பில் ஈடுபடாமல் உள்ளனர். இவை தவிர பழக்கமின்மை மற்றும் ஊக்கமின்மை, வாழ்க்கைமுறை மாற்றம், நேரமின்மை என்பனவும் காரணமாகவுள்ளன. இவற்றால் ஒக்டோபர் மாதம் வாசிப்பு தினமாக கொண்டாடப்படுகிறது.

நாம் வாசிப்பு பழக்கத்தை வளர்க்க வேண்டும். அதற்காக வாசிப்புப் பழக்கத்தைத் சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும், இதற்காக தினமும் குறைந்தது முப்பது நிமிடங்கள் ஏதாவது பயனுள்ள நூல்களை வாசிக்க வேண்டும்; பள்ளிகளில் நூலகங்கள் வருகையை ஊக்குவிக்க வேண்டும்; பெற்றோர்கள் வீட்டிலேயே புத்தக வாசிப்பு சூழலை உருவாக்க வேண்டும்இ; கிராமங்களுக்கொரு நூலகங்கள் அல்லது வாசிகசாலைகள் போன்றவற்றை நிறுவுதல் வேண்டும். வாசிக்கும் போது சிந்திக்கவும் கேள்விகள் எழுப்பவும் பழக்கப்படல் வேண்டும் இவற்றினை மேற்கொள்வதனால் ஒவ்வொருவரிடமும் வாசிப்புப் பழக்கம் தானாகவே உருவாகும்.

வாசிப்பு என்பது ஒரு மனிதனை முழுமையான நபராக மாற்றும் சக்தி கொண்டது. அறிவு என்பது ஒருவரின் வாழ்க்கையை உயர்த்தும் மிக முக்கியமான சாதனம். அந்த அறிவு வாசிப்பின் வழியாகவே பெரும்பாலும் பெறப்படுகிறது. நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் நம்மை உயர்வுக்கே கொண்டுசெல்லும் படிகள். வாசிப்பதை ஒரு நாளும் நிறுத்த வேண்டாம். புத்தகம் ஒரு நல்ல நண்பன்இ ஒரு குரு, ஒரு வழிகாட்டி எனவே வாசிப்பதை ஒரு பழக்கமாக பின்னர் ஒரு ஆசையாக மாற்றிக்கொள்ளுங்கள். அறிவு வளர்ச்சி என்பது உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் பண்பட்ட நிதானம் ஆகும்.

ய.ஜிந்துஷா
தரம் -12C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்வதெல்லாம் எழுவதற்கே

பரபரப்பாக இருந்த அந்த காலை பாடசாலையில் மாணவர்கள் காலைப் பிரார்த்தனையை முடித்துவிட்டு அவரவர் வகுப்பறைக்கு சென்று கொண்டு இருந்தார்கள். பாடசாலை அதிபர் ஆசிரியர்களை அழைத்து பாடசாலை மட்ட கண்காட்சி பற்றி பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தார்.

"ஆசிரியர்களுக்கு இந்நேர வணக்கங்கள், நமது பாடசாலையில் வருடாந்த தமிழ்தினக் கண்காட்சியானது இவ்வருடமும் நடைபெற இருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுடைய வகுப்பு மாணவர்களுக்கு இது பற்றிய விளக்கத்தைக் கூறி அனைவரையும் அதில் பங்கு பற்ற வையுங்கள்."

"தமிழ்த்தின கண்காட்சியா? "

"ஆம் தமிழ்மொழி சம்பந்தமான ஆக்கங்களைத் தயாரித்து காட்சிப்படுத்துதல்"

"ம்ம் சரி, எத்தனையாம் திகதி நடக்கப்போகின்றது கண்காட்சி"

"அடுத்த மாதம் ஆரம்பத்திற்குள் நடாத்தப்பட வேண்டும்"

"ம்ம் என்று ஆசிரியர்கள் பதிலளித்துவிட்டு, அவரவர் வகுப்பறைக்கு சென்றார்கள்.

அவ்வாறு இருக்க பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் பாட வேளையாகும். ஆசிரியர் வகுப்பில் இல்லாத காரணத்தினால் மிகவும் சத்தமாக வகுப்பறை காணப்பட்டது அவ்வாறு இருக்க தமிழாசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். அவரை கண்டவுடன் வகுப்பே அமைதியானது. அங்கு வந்த ஆசிரியர் மாணவர்களுடன் பேச்சு கொடுத்தார்.

"பிள்ளைகளே, அடுத்த மாதம் எங்கட பள்ளி கூடத்துல கண்காட்சி நடக்கப்போகுது"

" கண்காட்சியா? ஏன்ன ரீச்சர் கண்காட்சியா? எதனைப் பற்றியது "பொறுமை பொறுமை" எல்லாவற்றையும் விளக்கமாக சொல்லுகிறேன். கொஞ்ச நேரம் பேசாமல் அமைதியாக நான் சொல்லுறதை கேளுங்கோ"

"ஓம் டீச்சர் சொல்லுங்கோ"

"இது தமிழ் சம்பந்தமான கண்காட்சி. இதுக்கு நீங்க எங்கட கைகளால் உருவாக்கப்பட்ட சஞ்சிகைகள் துண்டுப்பிரசுரங்கள் விளம்பரங்கள் அறிக்கைகள் இதுபோன்று காட்சிப்படுத்தக் கூடிய பொருட்களைக் கொண்டுவர வேணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காட்சிப்படுத்துகிறது என்றால் விளங்கவில்லை? என்ன ஒப்படை மாதிரி எழுதிட்டு வர வேண்டுமா?”

“இல்ல இல்ல நீங்கள் ப்ரெசில் போர்ட் அதில் கலர் பென்சிலஇ பேனாக்களை எல்லாம் பயன்படுத்தி எவ்வளவு நேர்த்தியாக செய்ய இயலுமோ அப்படி செய்துட்டு வாங்கோ. அதோடஇ இதுதான் உங்கட இரண்டாம் தவணை கணிப்பீடு ஆகவே எல்லோரும் கட்டாயம் இதை செய்து கொண்டு வர வேண்டும் சரியா?”

“டீச்சர் நாங்க அழகாக செய்து கொண்டு வருகின்றோம். எப்ப கொண்டு வரவேண்டும்.”

“நீங்கள் இந்தக் கிழமைக்குள்ள கொண்டு வந்தாத்தான் சரி, பிழை எல்லாம் பார்த்துட்டு தயாரிக்க முடியும.” எனக் கூறிவிட்டு ஆசிரியர் அன்றைய நாளிலுக்கான பாடங்களை நடத்திச் சென்றார்

அந்த வகுப்பு மாணவர்கள் தாங்கள் கொண்டு வரப்போகின்ற பொருட்கள் பற்றி தமக்குள் உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆயினும் , அங்கே இருந்த செல்வி மட்டும் அமைதியாக, எதனையோ எண்ணியபடி ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். இதனைக் கவனித்த அவளது நண்பி “என்ன செல்வி ஏன் முகம் சோர்ந்துள்ளது. ஏன் என்ன ஆச்சு?” “ ஒன்றுமில்லை மாலா கண்காட்சி நடக்கப் போகிறதல்லவா அதைப் பற்றி தான் யோசித்து கொண்டு இருக்கிறேன்.” “இதுல யோசிக்க என்ன இருக்கு செல்வி. ஏதாவது நல்லதா எழுதிக்கொண்டு வாவென்” “எழுதலாம் தான்... ம் எழுதுவம்.” “ சரி இன்னும் கொஞ்ச நேரத்தால பள்ளிக்கூடம் விடப்போகுது புத்தகப்பைல எல்லாத்தையும் எடுத்து வை” “ ம்... சரி மாலா” பாடசாலை நிறைவடைய செல்வி தன்னுடைய வீட்டிற்குச் சென்றாள்.

“அம்மா.... அம்மா....” “என்னடி வந்த உடனே இப்படி ஏலம் போடுற.... என்னடி வந்த உடனே இப்படி கூப்பிடுற. என்ன விஷயம்” “அம்மா, அப்பா எங்கே?”

“விடிய வேலைக்குப் போனவர். இப்ப சாப்பிட வாற எண்டவர் இன்னும் காணவில்லை. வந்துடுவர்.” (செல்வியிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை).

“ஏன் நீ வந்த உடனே அப்பாவை கேட்கிறாய்.” “அதுவா அம்மா, வாற மாதம் எங்கட பள்ளிக்கூடத்துல கண்காட்சி நடக்க போகுது அதுக்கு எங்களை ஏதாவது சஞ்சிகை துண்டுப்பிரசுரம், விளம்பரம் மாதிரி ஏதாவது செய்துகொண்டு வரட்டுமாம். அதுக்கு கடையில பிரிசில் போர்ட் வாங்கி அழகாக எழுதிக் கொண்டு போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.'' "அப்படியா? சரி அப்பா வறட்டும். நீ அவரையே வந்தவுடன கேள், இப்ப வந்து சாப்பாட்ட சாப்பிடு''

செல்வியும் உணவை அருந்திவிட்டு தந்தையின் வருகைக்காகக் காத்திருந்தாள். வேலை முடிந்து களைப்புடன் வந்த தந்தையைக் கண்டதும், ''அப்பா இன்டைக்கு பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது தெரியுமா?'' ''என்ன பிள்ளை நடந்தது ரீச்சர் ஏதாவது சொன்னாரா?'' ''ஓம் அப்பா கண்காட்சி நடக்கப்போகுதாம்'' ''ஆ நல்ல விடயம் தானே, இப்ப என்ன செய்ய வேண்டும் பொருள் ஏதும் வாங்க வேண்டுமா?'' ''ஓம் அப்பாஇ எனக்கு ப்ரெசில் போட்டும் கலர் பென்சில்களும் வாங்கித் தாங்கோ.'' ''பிள்ளை செல்வி, முதலாளி இந்த மாதச் சம்பளம் தாரேன் என்றவர் இன்னும் தரவில்லை. தந்தவுடனே உனக்கு வாங்கி தாரேன் சரியா?''

''இல்ல அப்பா இந்த கிழமைக்குள்ள கொண்டு வரவேண்டும் எண்டவா டீச்சர்'' செல்வியின் தந்தை அதற்கு பதில் ஏதும் சொல்லாமல் சென்றார்.

வழமை போல் பாடசாலையும் ஆரம்பித்தது செல்வி அவளது வகுப்பறைக்குள் அமர்ந்திருந்தாள். அவளின் வகுப்பு மாணவர்கள் அழகழகான காட்சிப் பொருட்களை தயாரித்துக் கொண்டு வந்திருந்தார்கள். அவற்றினைக் கண்டவுடன் செல்வியின் கண்கள் கலங்கி நின்றது. அவ்வேளையில் தமிழப்பாட ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார். ''வணக்கம் பிள்ளைகள்''

''வணக்கம் டீச்சர'' ''என்ன, கண்காட்சிக்கான பொருட்களைத் தயாராக வைத்துள்ளீர்கள் போல் உள்ளது.'' ''ஆம், ஆம் டீச்சர். கொண்டு வந்துள்ளோம்.'' ''ம், நல்ல கெட்டிக்காரப் பிள்ளைகள். கொண்டு வந்த பொருட்களை இந்த மேசையில வையுங்கோ''

"ஓம் ரீச்சர்" ''சரி, இன்னும் கொண்டு வராத ஆக்கள் ஒருக்கா எழும்புங்கோ'' (செல்வி உட்பட ஐந்து மாணவர்கள் எழுந்து நின்றார்கள்.)

"ஏன் பிள்ளைகள் செய்யவில்லை இது தான் உங்கட தவணைப் பரீட்சை கணிப்பீடு என்று சொன்னனான் அல்லவோ? கட்டாயம் நாளைக்கு கொண்டு வரவேண்டும். இல்லைாட்டி அதிபரிட்டத்தான் கூட்டிக்கொண்டு போவன்"

இல்ல ரிச்சர் வேண்டாம் நாளைக்கு கொண்டு வருகிறோம்"

''ம். சரி நாளைக்குத்தான் கடைசி சந்தர்ப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே ஆசிரியர் அவர்களை அமரச்செய்த பின், தன் கற்பித்தலைத் தொடங்கினார். அவ்வாறே பாடசாலை நிறைவடைந்தும் செல்வி வீட்டுக்குச் சென்றாள். அங்கு அவளது தாயும் தந்தையும் அமர்ந்திருந்தார்கள்.

"அம்மா,அப்பா இன்டைக்கு தமிழ் டீச்சர் எங்களை நிற்க வைச்சுப் பேசிப்போட்டா. நாளைக்குத்தான் கடைசியாம், நாளைக்குக் குடுக்காட்டி அதிபரிட்ட தான் விடுவாராம்."

"நாங்கள் என்னதான் செய்கிறது எங்கட நிலை அப்படி. முதலாளி காசு தாரன்இ தாரேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் இன்னும் தந்தபாடு இல்லை." "அப்படி என்றால் நான் இப்ப என்ன செய்யறது. நாளைக்கு போய் டீச்சரிட்ட பேச்சோ வாங்குவது."

"நாளைக்கு பின்னேரம் எப்படியாவது உனக்கு நான் வாங்கித் தரேன். விடிய பள்ளிக்கூடத்தில் போய் ஏதாவது டீச்சருக்கு ஏதாவது சொல்லி சமாளி. வேறு எதுவும் செய்ய இயலாது" "என்னப்பா இப்படி சொல்லுறீங்க. நாளைக்கும் கொண்டு போகாட்டி அவோ அதிபரிட்ட தான் விடுவா"

என அழுது கொண்டே செல்வி உள்ளே சென்றுவிட்டாள். மறுநாள் காலை செல்வியின் மிகுதி நண்பர்கள் அனைவரும் கண்காட்சிக்கான பொருட்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வந்து ஆசிரியரிடம் ஒப்படைத்தார்கள் அந்த வகுப்பில் செல்வி மாத்திரமே வேலை நிறைவேற்றாமல் வந்திருந்தாள். ஆசிரியர் செல்வி நோக்கி வந்து,

"செல்வி நேற்று என்ன சொன்னேன் உனக்கு இன்று தான் இறுதி நாள் என்று சொன்னேன் அல்லவா? அதிபரிடம் போவோம் வா" "வேண்டாம் டீச்சர் தயவுசெய்து ஒரே ஒரு நாள் மட்டும் தாங்கோ" சரி நாளைக்கு தான் கடைசி நாளைக்குத் தரவில்லை என்றால் கணிப்பீட்டுப் புள்ளி பூச்சியம் தான் உனக்குப் போடுவேன்." "நாளைக்குக் கட்டாயம் கொண்டு வருகிறேன்"

அன்று பாடசாலை நிறைவடைந்ததும் அழுது கொண்டே வீட்டுக்கு சென்றாள். அங்கே தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறினாள்.

"பிள்ளை செல்வி எல்லாம் எங்கள் விதி என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. சரி வா பக்கத்திலேயே கடையில போய் காசு பிறகு தாறன் எனக்கூறி கேட்டுப் பாப்போம்"

இருவரும் கடைக்குச் சென்று கடைக்காரருக்கு நிலைமைகளை புரிய வைத்து கடதாசி, வண்ண அட்டை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தன்னால் மிகவும் அழகான தமிழ்த் தாயை ஓவியமாக வரைந்து கொண்டு மறுநாள் பாடசாலைக்குச் சென்றாள். “என்ன செல்வி இன்று என்றாலும் கண்காட்சிக்கு உரியவற்றை தயார் செய்து வந்தாயா?” “ஓம் டீச்சர் அழகிய தமிழ்த் தாயை வரைந்து வந்துள்ளேன். இதோ நீங்களே பாருங்கள்.” “ ஆ, சரி சரி நன்றாக இருக்கிறது. கொண்டு வந்து மேசையில் வைத்து விடும்” என்று அலட்சியத்துடன் பதில் அளித்து அவ்விடம் விட்டு விலகிச் சென்றார்.

கண்காட்சிக்கான நாளும் வந்தது. பாடசாலைக்கான கண்காட்சிக்கான ஆயத்த வேலைகள் எல்லாம் வெகுவிமர்சையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அனைத்து மாணவர்களது ஆக்கங்களும் காட்சிக்காக பிரதான மண்டபத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், அயல் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என மண்டபமே களைகட்டியிருந்தது. மாணவர்கள் அனைவரும் மிக ஆர்வத்துடன் கண்காட்சி பார்வையிடத் தொடங்கினார்கள்.

“செல்வி நீயும் வா நாங்களும் போவோம்.” “மாலா, நீ போ. நான் வகுப்பறைக்குச் சென்று தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன.” “அப்படியா, சரி சரி நான் போறேன் நீ வேகமா வா”

செல்வி வகுப்பறைக்குச் சென்று தண்ணீர் போத்தலை எடுப்பதற்காகக் கீழே குனிந்தாள். கீழே பார்த்த அவளுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அவள் மிகவும் கஷ்டப்பட்டு வரைந்த அந்த அழகிய ஓவியம் வகுப்பறையின் ஒரு மூலையிலேயே சுருட்டப்பட்ட நிலையில் இருந்தது. அதைக் கண்ட செல்விக்கு வேதனை தாங்க முடியவில்லை. விழிகளில் கண்ணீர் பெருக்கெடுக்க அதைப் பார்த்த வண்ணமே இருந்தாள். அங்கே சுருட்டப்பட்டிருந்தது அவளது ஓவியம் மட்டுமல்ல அவளின் இதயமும் தான்.

வழிந்த கண்ணீர் ஓவியத்தை நனைத்து பட்டுத்தெறித்தது. அதில் அவளது தந்தையின் வேர்வைத்துளிகள் தெரிய, “ வீழ்வதெல்லாம் எழுவதற்கே, சாதிக்கப் பிறந்தவள் நீ” என அவளது இதயம் இட்ட உரத்த சத்தம் கேட்டு தன் இரு கண்களையும் இரண்டு கைகளாலும் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்..

**மு. கஜனிகா**
**தரம் -12C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் உயர்வு உன் கையில்.....

நாளை என்றால் தாமதம் ஆகிவிடும்
இன்றே அறிவைத் தேடுங்கள்.
உன்னால் முடியும்! முயற்சி செய்!
மனம் தளர விடாதே!

“முடியாது” என்ற சொல்லுக்கு அர்த்தம் தேடாதே!
“முடியும்” என்பதை செயலில் காட்டு.
என்றும் எதிலும் நீதான் முதல்வன்!
என்பதை மனதில் பதிய விடு!

நம்பிக்கை வைத்து செயலில் இறங்கு,
நெஞ்சை நிமிர்த்தி நட!
வீறு கொண்டு எழு!
அச்சம் இல்லை எனப் பறைசாற்று!
தடைகளை தகர்த்தி அறிவைப் பெற
இன்றே புறப்படு.......

சுரேந்திரன் அமிர்தா
தரம் – 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசான்

அன்னை போன்ற எம் ஆசான்
அன்பை அள்ளித் தந்திடுவார்
ஆனந்தமாகவே எமை அழைத்து
ஆக்கங்கள் பலவும் கற்பிப்பார்
இன்பமாக நாம் வாழ
இனிதே பல வழிசொல்வார்
ஈட்டி போன்ற அறிவதனால்
ஈர்ந்திடுவார் பல நுட்பங்களை
உயர்வாய் நாமும் வாழ்ந்திடவே
உண்மையாக உழைத்திடுவார்
ஊக்கம் தன்னை எமக்களித்து
ஊன்றுகோலாய் தானிருப்பார்
எளிமையான முறைதனில்
எடுத்துரைப்பார் பாடங்களை
ஏணியாக தானிருந்து
எம்மை ஏற்றிடுவார் வாழ்வினிலே
ஐயமறு கல்விதனை
ஐஸ்வர்யமாக தந்திடுவார்
ஒற்றுமையாக நாம் எல்லாம்
ஒழுகிடவே பல வழி சொல்வார்
ஓங்கு புகழ் நாம் பெறவே
ஓய்வு இன்றி உழைத்திடுவார்
ஔவை சொன்ன வழியதனில்
ஔடதமாய் எமக்கிருப்பார்
அ∴தே அவர் வழிநின்று
அ∴தே நாமும் வளர்ந்திடுவோம்

ஆராதனா ராஜ்பவான்
தரம் – 7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழ்வினை வந்துறுத்தும்

**"ஊழிற் பெருவழி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"**

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க அதாவது, ஊழ்வினையை விட வலிமையானது இந்த உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை என்பது அதன் பொருளாகும். ''ஆற்றின் வழி செல்லும் தெப்பம் போல'' நமது ஆருயிர் ஊழின் வழியே தான் செல்லும் என்று பண்டைத்தமிழ் இலக்கியமான 'புறநானூறு' எடுத்து இயம்புகின்றது. நாம் செய்யும் செயல்கள் எம்மை தவறாது வந்து சேரும் என்பது ஊழ்வினை கோட்பாட்டின் அடிப்படையாகும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடிய கணியன் பூங்குன்றனார் ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என அழகாக கூறுகின்றார். நாம் செய்யும் செயல்களே நமக்கு நல்வினையும் தீவினையும் விளையக் காரணமாக அமைந்து விடுகின்றன. ''வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினைவிதைத்தவன் தினை அறுப்பான்'' என்றும் ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்றும் முன்னோர்கள் கூறிய முத்தான வார்த்தைகளை அர்த்தம் இதுவன்றோ.

தேனிலே ஊறிய செந்தமிழன் சுவையாம் நெஞ்சை அள்ளும் 'சிலப்பதிகாரம்' ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' என்றும் ''உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர'' என்றும் ''ஊழ்வினை வந்து உறுத்தும்'' என்று மூன்று கருத்துக்களை முன்வைக்கின்றது. சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் கோவலன் யாழ் மீட்டி கானல் வரி பாடுகின்றான். மாதவி, அதே கருத்தை வைத்து யாழ்மீட்டிப் பாடுகின்றாள் எனினும் மாதவியின் பாடற் பொருள் மீது ஐயம் உற்ற கோவலன் மாதவியின் குலப்பிறப்பில் சந்தேகம் கொண்டு அவ்விடத்திலேயே பிரிந்தான். மாதவி துடிதுடித்தாள்.இதை இளங்கோவடிகள் அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

**"கானல் வரி யான் பாட – தான்
ஒன்றின் மேல் மனம் வைத்து
மாயப் பொய் பல கூட்டும்
மாயத்தாள் பாடினாள் – என
யாழிசை மேல் வைத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினை வந்துறுத்தது.'' என்று அழகாக கூறுகின்றார். மேலும் காற்சிலம்பை விற்பதற்காக மதுரைக்கு வந்த கோவலன் பாண்டிய மன்னனால் கொலையுண்டார். நீதி கேட்டு வந்த கண்ணகியை நோக்கிய பாண்டிய மன்னன்

அன்பான தாளொன்றின் மேல் வலம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் ஆயத்தம் பாடினால் என யாழிசை மேல் வைத்து ஊழ்வினை வந்துறுத்தது என்று அழகாக கூறுகின்றா.ர் மேலும் காற் சிலம்பு விற்பதற்காக மதுரைக்கு வந்த கோலம் பாண்டிய மன்னர் நல கொலை உண்டார் நீதி கேட்டு வந்த கண்ணகியை நோக்கிய பாண்டிய மன்னன் நீ யாரை நாம் வாழக்கூடிய வாழ்தல் வேண்டி உழ்வினை திறப்பு சூழ்நிலை செய்யப்பட்ட கோவலன் ஞானவன் மனைவி என்பவர்களை என்று அறிமுகப்படுத்தினான். மேலும் உண்மையை அறிந்த பாண்டிய மன்னன் உன்னை அறியாது செயலாற்றியை யானோ மன்னன் இல்லை இல்லை யானை கள்வன் என்று அவ்விடத்திலேயே குற்ற உணர்ச்சியா உயிர் நீத்தான்.

அரசியல் பிழைத்து அறம் கூற்றாக ஒன்றை இது மட்டுமின்றி கானகத்தே காதலியே காரருளிகை விட்டு களமாறாய் சென்றதும் ஊழ்வினை ஆண்டு கண்டது என்று நலம் என்பது அந்த புகழேந்தி புலவர் கூறுகின்றார். இவ்வாறு தமிழில் தோன்றி பல்வேறு இலக்கியங்களும் ஜாதி நம் மதம் மொழி என வேறுபாடு இன்றி உலக அறிஞர்கள் பலரும் ஊழ்வேனே கர்மா என்ற பெயர் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றனர்

எந்த ஒரு தாக்கத்திற்கும் சமமானது எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்பதை நியூட்டனின் மூன்றாம் விதி அறிவியல் சொல்லும் இந்த உண்மையை நம் வாழ்வியல் ஊழ்வினை கோட்பாட்டிற்கு மிகவும் பொருத்த முடியாது அன்று கொள் இன்று போல் என்றும் கூச்சம் என்று எண்ணி தீயவற்றை விளம்பி நல்லவற்றை பின்பற்ற வேண்டும் என்ற நாலடியாரும் வாக்குக்கிணங்க நடப்பு உன்னால் என்ன செய்து நலம் பெற வாழ்வோம்

**காலவண்ணன் கர்ணிகா**
**தரம் – 10B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆரோக்கியமும் உடற்சுகாதாரமும்

ஆரோக்கியம் வாழ்வுக்கு
ஆசீர்வாதம்
அதைக் காப்பது நம்
பொறுப்பாகும்!
தூய்மையைப் பின்பற்றுவோம்
நாள்தோறும்
நலம்தரும் பழக்கங்கள்
தொடர்வோம் உறுதியாகவும்

சாப்பாடு நேரம் ஒழுங்காக வேண்டும்
காய்கறிகள், பழங்கள் சேர்த்துக்
கொள்ள வேண்டும்
நிலைக்கும் நலம்
விளையாட்டிலே,
தினமும் நடைப்பயிற்சி உண்டு
வாழ்க்கையிலே!

கைகளை கழுவு,
பற்களை துலக்கு
தூய்மையோடு வாழ்க்கையை - நடத்து
ஆரோக்கியம் இருந்தால்
மனமும் சிங்கம்
இளமையின் பேரழகு – நம்
நலம் தான் தினமும்!

து. அக்சனா
தரம் – 7E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி நிறைந்த வாழ்க்கை

முருகன் கோயில் மணி ‘‘டாங் டாங்’’ என அடித்துக் கொண்டிருந்தது. நெற்றியில் வியர்வை ஊறியபடியே மண்வெட்டியை பிடித்து வேலை செய்து கொண்டிருந்த கணபதியின் எண்ண அலைகள் கரைபுரண்டோடின. வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் அவன் மனம் ஏனோ வீட்டைப் பற்றிய சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆயினும் வேலையை முடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில் அவன் இருந்தான்.

‘‘கணபதி என்ன வேலையை முடிச்சுட்டியோ?....’’ ‘‘இல்ல ஐயா இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு’’இ ‘‘இப்ப கொஞ்ச நேரத்தால முடிஞ்சிடும்’’. கணபதி மௌனமாக வேலையை தொடர்ந்தார்.

‘‘என்ன கணபதி பேசாமல் இருக்கிறாய்? வழைமையா சிரிச்சி கதைப்பாய், இன்றைக்கு என்ன நடந்தது? ஒரு மாதிரி இருக்கிறாய்’’. ‘‘இல்லை ஐயா இண்டைக்கு காலையிலேயே என் மனைவிக்கு பிரசவவலி வந்து விட்டது, மனைவியை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டேன். ஆனால், கையில் பணம் இல்லை அதனால் நேரடியாக இங்கே வந்துவிட்டேன்’’.

‘‘என்ன கணபதி என்னிடம் வந்து கொஞ்சம் பணம் கேட்டிருந்தால் தான் தந்து இருப்பேன, நீ ஒன்றும் சொல்லாம இருந்தா என்ன தெரியும் எனக்கு’’ என்றாவாறே ஒரு தொகை பணத்தை கணபதி கையில் கொடுத்தார் முதலாளி.

கண்களில் நன்றி சொல்லிவிட்டு கன்றினை பிரிந்த தாய் பசு எவ்வாறு தன் கன்றினை தேடுமோ அதேபோலவே கணபதியின் மனமும் தன் மனைவியையும் குழந்தையையும் காணத் துடித்தது. வைத்தியசாலை அடைந்து உள்ளே செல்லும்போதே பிரசவபிரிவை பார்த்து விட்ட கணபதி அங்கேயே சிலையாகிப் போய் நின்றுவிட்டார். அவர் அங்கே சென்று நிற்கும் பொழுது தான் குழந்தையின் அழுகுரல் கேட்டது. குழந்தையின் அழுகுரல் அவன் காதில் தேனாய் இனித்தது.

குழந்தை பிறந்த இன்பத்தை விட அது ஆண் பிள்ளையா? பெண் பிள்ளையா என அறிவதிலேயே கணபதிக்கு ஆர்வம் மேலோங்கி இருந்தது. அவசர பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த மனைவி நிலையை டாக்டர் வெளியே வந்தால் தானே அறிய முடியும்.

சற்று நேரத்தின் பின் டாக்டர் வெளியே வந்தார். மகிழ்ச்சியில் திளைத்திருந்த கணபதி டாக்டரை பார்த்து, டாக்டர் என் மனைவிக்கு இப்பொழுது எப்படி இருக்கிறது? என்ன குழந்தை…? டாக்டர் அமைதியாக பதில் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண் குழந்தை பிறந்திருக்கிறது, ஆனால்.... என்ன டாக்டர் என்ன பிரச்சனை? " உங்கள் மனைவி பிரசவத்தின் போது இறந்து விட்டார். குழந்தையை மட்டும் காப்பாற்றி விட்டோம். மனைவியை காப்பாற்ற முடியவில்லை'', என்று டாக்டர் கண்கலங்கியவரே சொன்னார்.

கண்களில் கண்ணீரோடுஇ மனதில் வேதனையோடு தரையில் விழுந்த கணபதி அழத்தொடங்கினான். தொட்டிலில் தவழ்ந்த குழந்தையை பார்த்த கணபதி மறுபுறம் கட்டில் இறந்த தன் மனைவியை பார்த்து ஓ என்றவாறே அழத் தொடங்கினான். கணபதி தன் வாழ்க்கையை தொலைத்து விட்டேன் இனி எல்லாம் முடிந்துவிட்டது என்று இருக்கையில் ஒரு ஜீவன் அவனை தடுத்தது.

தன் பிள்ளைக்காக உயிர் வாழ வேண்டும் என்று நினைத்த கணபதி தன் மனதை மாற்றிக் கொண்டான். தன் மனைவியின் முகத்தை அவன் குழந்தையில் கண்டான். தன் குழந்தைக்காக உயிர் வாழ்ந்தான்.

காலத்துக்கு நடக்கத்தான் தெரியாதே ஆதலால் காலங்கள் உருண்டு ஓடி மறைந்தது. தன் மனைவி இறந்த கவலையை தன் பெண் பிள்ளையினால் கொஞ்சம் கொஞ்சமாக மறந்தான்.

கூலிக்கு தோட்ட வேலை செய்து வாழ்க்கையை ஓட்டினான். தன் பெண்பிள்ளைக்கு வாணி என்று பெயரும் வைத்தான். ஊரிலே உள்ள ஒரு பாடசாலையில் தன் மகளை சேர்த்தான். வாணி சிறுவயதிலிருந்து கல்வி, விளையாட்டு என அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கினாள். காலங்கள் நாட்களை தின்று மாதங்களை தின்று வருடங்களை விழுங்கியது.

வாணி வளர்ந்து 11-ம் தரத்தை எட்டிப்பார்த்தாள். அவள் நன்றாக படித்தாள். ஒரு நாள் திடீரென சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் நாள் இந்த நாள் என்று ஒரு நாளை அறிவித்தார்கள். கணபதி மிகவும் எதிர்பார்ப்போடு இருந்தான். சூரியனின் வரவை எதிர்பார்க்கும் செந்தாமரை மலர் போல பெறுபேற்றை எதிர்பார்த்து வாணியும் காத்திருந்தாள்.

"அப்பா...." என்று கத்திக் கொண்டே கணபதியை கட்டி அணைத்துக் கொண்டாள் வாணி. "என்னம்மா ஏன் கத்தினாய் என்ன ஆயிற்று?....." என்று வாணியைப் பார்த்து கணபதி கேட்டான்.

அப்பா நான் பரீட்சையில் பாஸ் ஆகிட்டேன். என்ன ஆசிர்வாதம் பண்ணுங்க என்று சொன்னவளை கணபதி கட்டியணைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் வேகத்தில் சாதாரண தரத்தில் பாஸ் பண்ணி விட்டேன் என கூறியவர் யு.்.டு படித்து பாஸ் பண்ணி விட்டேன் என கூறுவதற்கு காலம் தாமதிக்க இடமளிக்கவில்லை.

வாணி யுவதியாக மாற தந்தையும் முதுமைப் பருவத்தை அடைந்தார். மகளின் படிப்பு எல்லாம் முடிந்து விட்டது. இனி கவலைகளும் முடிந்து விடும் என்று இரவுப் பொழுதில் தன் மனதில் எண்ணிக் கொண்டான் கணபதி.

ஆனால் விதி இடையினில் தாண்டவம் ஆடியது. வாணி படிப்பை முடித்த கையோடு வேலை ஒன்றை தேடினாள். வேலை என்ன இலகுவிலா கிடைத்துவிடும்? பொறுமையாக தானே கிடைக்கும் என்று கணபதி வாணிக்கு ஆறுதல் கூறினார்

வாணி கணபதியின் பேச்சை உதாசீனப்படுத்தினாள். தந்தையை வெறுக்கத் தொடங்கினாள். சில நாட்கள் செல்லஇ வாணிக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஒன்று கிடைத்தது. நல்ல வேலை. கை நிறைய சம்பளம் படிக்க வைத்த தந்தையைப் பற்றி சிந்திக்காமல் வெளிநாடு செல்ல திட்டமிட்டாள்.

"அப்பாஎனக்கு நல்ல வேலை கிடைத்து விட்டது. கை நிறைய சம்பளம் வேறையாம் என்று கூற ' எங்கம்மா வேலை' என்று கணபதி அகம் மகிழ கேட்டான். "வெளிநாட்டில் அப்பா இங்கே இருந்து நான் படித்த படிப்புக்கு வேலை தேட முடியாது அதோட அங்க சம்பளம் கூடவாம். சரி வாணி அங்கே போகணும் என்றால் நிறைய பணம் செலவாகுமே, அப்படியென்றால் நான் யாரிடமாவது பணம் புரட்டித் தாரன்.

வருடங்கள் உருண்டோட வந்திறங்கினாள் வாணிஇ உருமாறியிருந்தது. அவள் மட்டுமல்ல அவள் குணமும் தான் கணபதி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். "வந்துவிட்டாயா! என் தங்கமே, வாணி" என்று கணபதி தன் மகளைப் பார்த்து பாசமாக கூறினான்.

வாணி, வந்ததும் வராததுமாக வாங்கோ அப்பா வந்து காரில் ஏறுங்கோ" என்றாள். எப்படியிருக்கிறீர்கள். அப்பா உங்களை நான் தனியே தவிக்க விட்டுவிட்டு நான் சென்றது தவறுதான். என்னை மன்னித்துவிடுங்கள் என்று வாணி கேட்பது போல கற்பனை உலகில் மிதந்த கணபதிக்கு வாணி அவ்வாறு கூறியதும் யாரோ பிடரியில் அறைந்தது போல உணர்ந்தவன் திடுக்குற்றான். சரி மகள் தானே கூப்பிடுகிறாள் என்று தன் கவலையை மறைத்து காரில் ஏறினான். காரினுள் ஒரு ஆண்மகன் கூடவே ஒரு அழகான சின்னப் பையன்இ பார்த்த கணபதி ஒருகணம் அதிர்ந்தே விட்டார்.

"வாணி யாரும்மா இது" அப்பா இது தான் உங்கட மருமகன். என்ர கணவன் என்றாள். பாச நேசத்துக்கு பகைக்கத்தான் தெரியாதே! சரி என்று அந்த அதிர்வையும் தாங்கிக் கொண்டான் கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் புறப்பட்டது. நேராக அனாதை ஆச்சிரமத்தை அடைந்தது. காரில் இருந்து இறங்கி கணபதி என்ன இடம் என்று தெரியாமல் விழிக்க வாணியும், அவள் கணவனும் அநாதை ஆச்சிரமத்தின் உரிமையாளரிடம் ஏதோ கதைத்தனர்.

“அண்ணா நேற்று சொன்னேன் தானே அவர் தான் இவர். பெயர் கணபதி, வயது 53 என்று பர்சை எடுத்து பணத்தைக் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டாள்.

“அப்பா நீங்க இனி இங்கதான் இருக்கப் போறீங்கள் எல்லா வசதியும் அவங்க உங்களுக்கு செய்து கொடுப்பாங்க. நான் வாரத்திற்கு ஒரு முறை வந்து பார்த்திட்டுப் போறேன். என்றாள்.

‘இடியொலியைக் கேட்ட நாகம் போல பேரதிர்ச்சியை கொடுத்த வாணியைப் பார்த்து கணபதி, ஓ “ நீ என்னை இஞ்ச கொண்டு வந்து சேர்த்ததற்கு பதிலா என்னை உயிரோட வைத்து கொழுத்தியிருந்தாலும் கூட கவலைப்பட்டிருக்க மாட்டேன்.” என்று தேங்கி நின்ற கண்ணீரை வரவழைத்து மார்பில் அடித்துக் கொண்டு அழுதான் கணபதி.

கணபதியின் மனம் ஏமாற்றம் அடைந்தது. வாணி தனது தகப்பனை பொருட்படுத்தாது அங்கேயே விட்டுவிட்டு காரில் சென்று விட்டாள்.

ஒரு மாதத்தின் பின் வாணி தன் கணவன், தன் பையனுடன் தன் தந்தையான கணபதியைப் பார்க்க வந்துகொண்டிருந்தாள். வருகிற வழியில,“ அம்மா நாங்க எங்க போறோம்” என்று வாணியின் மகன் கேட்டான் .”நாங்க உங்க தாத்தாவைப் பார்க்க போறோம்டா என் செல்ல மகனே! “அவர் எங்கம்மா இருக்கிறார் .?” அனாதை ஆச்சிரமத்ததிலடா” ஏன் அங்கே இருக்கிறார். அம்மா?” அவங்களுக்கு வயசாகிச்சு இல்லையா அதுதான் அங்க இருக்கிறார். “அப்ப உங்களுக்கும் வயசாகிடுச்சின்னா நானும் அனாதை ஆச்சிரமத்திலயா அம்மா! கொண்டு வந்து விடணும்?

வாணிக்கு அப்படியே நெஞ்சில் ஈட்டி எறிந்தது போன்ற உணர்வு ஏதோ “சுரீர் சுரீர்” என்று தைத்தது.

“பதில் சொல்லுங்கம்மா…?”

பதிலில்லா மனதில் “பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு” என்ற வசனம் மட்டும் ஏனோ மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தது.

**ரா.அக்சனா**
**தரம் – 13C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வி சீர்திருத்தம்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
கல்விக்கும் கால மாற்றமே
பழைய வழிகள் போதாதே - இன்று
புதிய பாதை தேடுகிறதே கல்வி

மாணவர் மையம் என அழைக்கின்றது
மனமோடு கற்றல் வழி வகுக்கிறது
கேள்வி விடையல்ல வாழ்வின் பயிற்சி
கற்பிக்கும் புதிய பக்கம் இதுவே!

திறனும் தேடலும் முக்கியமாம்
தகுதியால் உயர்ச்சி நிகழ்கிறதாம்
தொழில்நுட்பம் தோழனாய்
திறன் கொள்கைகள் மேலோங்கி
சுயமாகக் கற்றுக்கொள்ளும் நிலை
புதிய கல்வி சீர்திருத்தத்தின் விளைவே!

ஆசிரியன் இல்லை கட்டளைமான்!
மாறி இப்போது வழிகாட்டி
மாணவனே சிந்தனை தீபம்
மாற்றம் கொண்ட கல்விச் சூழல்
புதிய கல்வி சீர்திருத்தமே!

உண்மை தேடும் பயணம் இதுவே
உலகுடன் ஒத்திசையும் முயற்சி இதுவே
புதிய கல்வி ... புதிய பாதை .....
புதிய பரிசு ... புதிய ஒளி புதுமை கொண்டு வருமே!
புதிய கல்வி சீர்திருத்தமே!

S.ஆருக்சி
தரம் – 7E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவே உயர்வு தரும்

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்பது திருவள்ளுவரின் திருவாக்காகும். மனிதனுடைய நற்குணங்களில் நனி சிறந்தது பணிவுடமை எனும் பண்பாகும். அறிவினால் ஏற்படும் பெருமை தானாகவே பணியும். ஒரு சிலருக்கு கல்வி, கேள்வி, பொருள், பண்டம், பட்டம், பதவி போன்றன இருப்பினும் அவர்களிடம் பணிவு இல்லாதிருக்கும் ஆனால் அவர்கள் சிறப்படையமாட்டார்கள். உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததாகும். உயர்வுக்கு பணிவு எவ்வளவு இன்றியமையாததோ அது போல வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாததாகும்.

பணிவுடமையாவது எமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் பிறரிடம் பணிவாக நடந்து கொள்ளும் பண்பாகும். மற்றவர்களிடம் அன்பு காட்டி பணிவாக நடந்து கொள்ளும் எம்மிடத்தில் அகம்பாவம் வராது. இந்த அரிய குணம் எம்மில் பலருக்கு அமைவதில்லை. பணிவானது எமக்குக் கிடைத்த ஒரு அரிய செல்வமாகும்.

அடக்கமும் பணிவும் உள்ளவர்கள் தமது வாழ்வில் சிறப்புடைவார்கள். இந்த உண்மையை நம் முன்னோர்கள் தாம் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மூலம் எமக்கு எடுத்துணர்த்தியிருக்கின்றார்கள். எங்களை எப்போதும் அறிவூட்டும் ஆசான்களாக தமிழ் நூல்கள், நீதி இலக்கியங்கள் எல்லாம் பணிவு எனும் பண்பின் உயர்வைக் கூறுபவையே ஆகும். அடக்கமும் பணிவும் பொறுமையும் மக்கள் வாழ்வில் எத்துணை அவசியமானவை என்பதை வள்ளவர் பெருமானும் தமது அறநூலிலே அடக்கமாக முக்கியப்படுத்தகிறார். 1330 குறட்பாக்களுடைய தம் திருக்குறளிலே அடக்கமுடமை என்ற அதிகாரத்தைப் படைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். நண்பர்களிடம் சரி, எம்மைவிடத் தாழ்தோரிடமும் சரி எந்தச் சந்தர்ப்பத்திலும் சினந்து கடிந்து வெட்டெனப் பேசுவது பணிவு ஆகாது. அவ்வாறு பேசுவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது. அதற்கு மாறாக நாம் பேசிய சொற்கள் மற்றவர்களின் மனதில் மூளாத் தீப் போல் மூண்டு கொண்டிருக்கும். வேதனையும், வெறுப்பையும் கூட உண்டாக்கவல்லன அந்தச் சொற்கள்.

"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்ற குறளானது பணிவிழந்து நாம் கூறும் வன் சொற்களின் கொடூரம் பற்றிக் கூறுகின்றது. நாவடக்கம் எம் எல்லோருக்கும் மிக அவசியம். "நாவினைக் காக்கும் பண்பு எமக்கு மிகத் தேவையானது" என்று சான்றோர்கள் எமக்கு என்றோ உரைத்த முதுமொழியை நம் வாழ்வில் என்றும் கடைப்பிடிக்க வேண்டும். பணிவுடன் நடப்பவரிடத்தே நற்பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாகவே வளரும். "கீழ்லோராயினும் தாழ்உரை வெட்டெனப் பேசேல், சினமது கொள்ளேல், கடிவது மற" என்பன ஔவைப் பாட்டியார் கூறிய மொழிகளாகும்.

பணிவாக நாம் நடப்பதால் எமக்கு என்றும் இழிவு வராது. அதற்கு மாறாக நமது பெருமையை, உயர்வை, நாகரிகத்தை அது புலப்படுத்துவதால் அது அமையும் என்பதை நம்ப வேண்டும். காய்த்துப் பழுத்து பயனுடைய மரத்தினது கிளைகள் தாழ்ந்து இருக்கும். பொத்தி வெளி வந்த வாழை தலை சாய்ந்து நிற்கும். தாழ்ந்த கிளைக்கும், தலைசாய்ந்த வாழைக்கும் தான் பெருமை இந்த உவமையை அறிந்தே வள்ளவர் " எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வந்தகைத்து" என்ற கூறியிருக்கிறார்.

வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடந்த கொள்ள வேண்டும் என்பதை நாம் மாணவப் பருவத்திலேயே கடைப்பிடித்து வர நாம் பயிலுதல் அவசியம். எனவே அறிவுடைச் சான்றோர், அரசியல் தலைவர்கள், தொண்டர்கள், சரித்திர நாயகர்கள் அனைவருக்கும் பணிவே ஏற்ற அணிகலமாகும். இந்த அணிகலனேயே சமூகமும் எதிர்பார்க்கின்றது. பணிவுடன் வாழ்வாரே உண்மையான மனித வாழ்வு வாழ்பவர்களாவார். வாழ்வாங்கு வாழும் முறையும் இதுவே. ஆதலால் தான் நமது முன்னோர் பல கருத்து முன்வைத்தனர். அதன் உண்மையை உணர்ந்து நாமும் பணிவுடன் வாழ்வாங்கு வாழ முற்படுவோமாக.

**கு.துக்ஷாலினி**
**தரம் – 7B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

அறம் வளர்க்கும் அமுத மொழி
ஆதியில் தோன்றிய மொழி
இளமை குன்றா மொழி
ஈடில்லா தொன்மை மொழி!

உயிருடன் கலந்த மொழி
ஊக்கமதை தந்திடும் மொழி
எத்திக்கும் நிறைந்த மொழி
ஏற்றம் பெற உதவும் மொழி
ஐயன் என்ற வள்ளுவனை கொடுத்த மொழி!

ஒற்றுமையை வளர்க்கும் மொழி
ஓங்கு புகழ் பெற்ற மொழி
ஔவை வளர்த்த மொழி
அ்.தே எங்கள் செம்மொழியாம் தமிழ்மொழி!

இனிமை கூட்டும் இன்பமொழி
அன்பை போதிக்கும் அருமை மொழி
துன்பம் போக்கும் துடிப்பு மொழி
நன்மை விளைக்கும் நற்செம்மொழி!'

இ.இனியா
தரம் – 7B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் சிறப்பு

கவியின் சுவையை பெருக்கும் - தமிழ்
கலந்தாருயிரை உருக்கும்
கவலை இருளை சிதைக்கும் - ஒரு
கதிராய் உலகில் உதிக்கும்

அணுவின் உருவை துளைக்கும் - குறள்
அடியால் உலகை அளக்கும்
அணிபொற் சிலம்பும் ஒலிக்கும் - என்றும்
அழியா புகழை விளைக்கும்

சந்த தமிழில் தழைக்கும் - மிகு
தாளத்(து) இசை முழக்கம்
சிந்தை முழுவதும் இனிக்கும் - செழும்
தேன் சேர் மலராய் மணக்கும்
அறிவின் நுணுக்கம் விளக்கும் - தமிழ்
அகிலத்(து) இயல்பை விரிக்கும்
உறவும் உளமும் சிறக்கும் அற
ஒளியத் தெளிவை அளிக்கும்.

ச. திக்ஷானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் உயர்வு உன் கையில்

நாம் வாழும் இக் கொடூரமான பிரபஞ்சமானது பல்வேறு அம்சங்களைக் கொண்டது. இப்படிப்பட்ட இக் கொடூரமான பிரபஞ்சத்தில் வாழவேண்டிய முழுப் பொறுப்பும் உன் கையிலேயே உண்டு. யாரும் உனக்காக உதவி செய்வார்கள் என்று நம்பாதே!

இந்தப் பிரபஞ்சத்தைப் பொறுத்த வரைக்கும் நமக்கு உறவென்று சொல்ல ஆயிரம் பேர் இருந்தாலும், இந்த மோசமான வாழ்க்கையை தனியாகத் தான் முகங்கொடுக்க வேண்டும். ஒவ்வொருத்தருக்கும் ஒரு பாதை, ஒரு பயணம், ஒரு வாழ்க்கை..!!

ஒரு மனிதன் தனது வாழ்க்கையை மறைத்து, மறைந்து தோல்வி அடைவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. அவற்றில் உள்ளுணர்வு, வெளிப்புறச் சூழல், சரியான அணுகுமுறை இல்லாமை. அதில் உள்ளுணர்வு காரணங்களாக தன்னம்பிக்கை குறைவு, பயம் மற்றும் சந்தேகம், மந்த மனநிலை, ஒழுக்கம் இல்லாமை, வெளிப்புறக் காரணங்களால் சூழ்நிலைத் தடைகள், ஆதரவு இல்லாமை, வாய்ப்பின்மை ஆகியன இடம்பிடிக்கின்றன.

அணுகுமுறை மற்றும் பழக்கவழக்க காரணங்களாக திட்டமின்மை, தவறான முன்னுரிமை (முக்கியமில்லாத விடயங்களில் நேரத்தை செலவிடல்), புதியதை கற்காமை தோல்வியில் இருந்து கற்றுக் கொள்ளாமை.

தோல்வி என்பது முழுமையான முடிவு அல்ல. அது "மாற்றம் தேவை" என்று சொல்லும் ஒரு சமிக்ஞை மாதிரி. வெற்றியாளர்கள் கூட பலமுறை தோல்வியடைந்துள்ளனர். அவர்களின் வித்தியாசம் என்னவென்றால் அந்தத் தோல்வியைப் பாடமாக மாற்றினார்கள்.

தனக்கு என்ன தேவை என்பதே தெரியாததே நிறையத் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது. மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை என்கின்ற பரீட்சை நடந்துகொண்டிருக்கின்றது.

நாம் அநேக நேரம் தோல்வியடைவதற்கு காரணம், நம்முடைய வாழ்க்கைப் பரீட்சையை எழுதாமல் மற்றவர்களுடைய வாழ்க்கைப் பரீட்சையைப் பார்த்து எழுதுவதால் தான் அந்த தோல்விகள் உருவாகின்றன. தோல்வியடையாமல் வெற்றியடைய வேண்டுமென்றால் நமக்கு என்ன தேவை என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். பின்பு அதில் தொடர்ச்சியாக பயணம் செய்ய வேண்டும். வெற்றி உங்களுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சிறப்பான அறிவுரையாக "உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள்!, உங்கள் திறமைகளில் நம்பிக்கை கொள்ளுங்கள்! உங்கள் சொந்த பலங்களில் நியாயமான நம்பிக்கையின்றி நீங்கள் வெற்றி அடையவோ மகிழ்ச்சியாக இருக்கவோ முடியாது." உங்களை நம்புங்கள்!.

அதே போன்று நன்றாக வாழ்ந்தால் பத்தப் பேர் பொறாமைப்படுவான் அதே பத்தப் பேர் கேவலமாக் பேசவான். இங்கு யாருக்கும் உன்னுடைய வலி, வருத்தம், கண்ணீர் இதெல்லாம் தெரியாது.

எப்படி வாழ்ந்தாலும் குறை சொல்லும் மனிதனின் மத்தியில் அடுத்தவன் என்ன பேசுகின்றான் என்று பாக்காமல் அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு போயிட்டே இரு. நல்லாயிருப்பாய்!.

"உறுதித்தன்மை என்பது ஒரு சிறிய வார்த்தை தான். ஆனால் அது யாருக்கு வந்துவிட்டதோ, அவனது வாழ்க்கை முழுவதையும் மாற்றிவிடும்" ஆனால் கவனம் தேவை அது சரியான விடயத்தில் இருந்தால் வாழ்க்கையைச் செதுக்கும். தவறான விடயத்தில் இருந்தால் வாழ்க்கையை அழித்துவிடும். திறமை இருந்து என்ன பயன் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவன் சாக்கடைக்குச் சமம்!.

உங்கள் வாழ்க்கையில் தொண்ணூற்றொன்பது வீதம் பிரச்சினைகளுக்குக் காரணம் நீங்கள் உங்களை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளாததுதான். நீங்கள் சும்மா இருக்கும் போது உங்கள் மனம் அலைபாய்கிறது. எனவே உங்களை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளுங்கள். சும்மா இருக்காதீர்கள். ஆகவே இதிலிருந்து உங்களுக்கு விளங்குகிறதுல்லவா? உன் உயர்வு உன் கையிலே!

**செல்வி அமிர்தா சுரேந்திரன்**
**தரம் – 7A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

ஒழுக்கம் என்றால் ஒளியின் வழி,
அது தரும் நமக்கு நல்ல பலன்கள் பல
நேரம் காக்கும் பழக்கம் நம் பெருமை,
நல்ல செயலில் மலரும் நம் இனிமை.

பள்ளியிலும் வீட்டிலும் ஒழுக்கம் இருந்தால்
வாழ்க்கைப் பாதையில் வெற்றி நம்மை அடையும்
மரியாதை மொழி, நற்பண்பு செயல்,
இதிலே மலர்கிகிறது மனிதர் மேல் வாழ்வு
அன்பு சொல்லும் இதயம் - பெருமை
தரும் ஒழுக்கம் நம் வாழ்வில் நம்மை
சின்ன வயதில் பழகும் ஒழுக்கம்
பெரிய வாழ்க்கையில் தரும் மகிழ்ச்சி ஒளிக்கதிர்

ஒழுக்கம் ஒரு பொக்கிஷம், தங்கத்தின் மதிப்பு,
அதை காக்கும் வாழ்க்கை தான் சிறப்பு
அறிவு, மரியாதை இதிலே பிறக்கும்
ஒழுகும் வழியில் உயர்வு வரும்.

ஒழுக்கம் நம் வாழ்வின் அடித்தளம்
அதை பின்பற்றுவதே – நம்
வாழ்வின் கடமை – ஒழுக்கம்
பேணி உயர்வடைவோம்.

**கன்க்ஷிகா**
**தரம் – 8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல்

"வள்ளுவன் தன்னை உலகினக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடினார் பாரதியார். வான்புகழ் கொண்ட வள்ளுவன் தந்த ஒப்பற்ற நூல் திருக்குறளாகும். நான் விரும்பும் நூலும் அதுவே. உலகப் பொதுமறை என அழைக்கப்படும் இந்நூலில் உள்ள கருத்துக்கள் என்னை பெரிதும் கவர்ந்துள்ளது. இரண்டு வரிகள் கொண்ட குறட்பாக்களும் மனித வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

திருவள்ளுவரின் சிந்தனை ஊற்றினும் பெருக்கெடுத்துப் பாய்ந்த தேனாறே திருக்குறள் ஆகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பகுதிகளை கொண்டுள்ளது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களையும் கொண்டுள்ளது. திருக்குறள் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலாசிரியரான திருவள்ளுவர் தமிழ்நாட்டிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர். தெய்வப்புலவர், செந்நாப்போதகர், பொய்யாப் புலவர், நான்முகனார், மதானுபங்கி, முதற் பாவலர் பொருநாவலர் எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

திருக்குறளுக்கு பலர் உரையெழுதியுள்ளனர். இவ்வுரைகளில் எல்லாம் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்த உரையாகும். திருக்குறள் இலத்தீன், எபிரேயம், ஆங்கிலம், பிரெஞ்சு, கிரேக்கம், செர்மோனியம், உருசியம் போன்ற மேல்நாட்டு மொழிகளிலும் வடமொழி, ஹிந்தி, தெழுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற இந்திய மொழிகளிலும் சிங்களத்திலும், சீனம், மலேசியம், பர்மியம், ஜப்பான் போன்ற கீழைநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிஞர்கள் போற்றும் நெறிகளை வழங்கி உலக மக்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்கும் பெருமை இந்நூலாசிரியரையே சாரும். அறத்தின் சிறப்பினை விளக்க வந்த வள்ளுவர் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை மக்களுக்கு அழகுற எடுத்துரைத்தள்ளார். அவர் கூறும் குறள்நெறி சாதி, மத, இன,பேதம் எதுவுமற்றதாய் உலகனைத்திற்கும் பொதுவானதாய்த் திகழ்கின்றது. இதனாலையே இந்நூலை உலகப் பொதுமறை என மக்கள் அழைக்கின்றனர்.

திருக்குறளின் பெருமையை உணர்ந்து ஔவையார் "அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத்தறிந்த குறள்" எனக் கூறிப் புகழ்ந்தார். வள்ளுவன் தந்த திருமறையைத் தமிழ் மாதின் இனிய உயர்நிலையை உள்ளந் தெறிவுறப் போற்றுவோம்". என்று பாடினார் கவிமணி. அறநூல்களில் திருக்குறளும் நாலடியாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவை இதனைப் ''பழகு தமிழ்ச் சொல்லருமை நாவிரண்டில்'' என்னும் பழமொழியால் அறியாலாம்.

திருக்குறளில் சொல்லப்படாத கருத்துக்களே இல்லையெனலாம். எச்சமயத்தினக்கும் எம்மொழியினருக்கும் ஏற்ற கருத்துக் கருவூலமாகத் திருக்குறள் மிளிர்கிறது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு வளரவேண்டும் என்னும் வள்ளவர் ''மனத்தக்கண் மாசிலனாதல் அனைத்திறன் ஆகுல நீர் பிற'' எனத் தெளிவுபடுத்துகிறார்.

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்கிறார் வள்ளவர். கடுகு சிறிது காரம் பெரிது என்பது போன்று திருக்குறளும் சிறிய குறட்பா வடிவில் இருப்பினும் அதன் கருத்துக்களோ மிகச் சிறந்தவையாக ஆழம் மிக்கனவாக அமைந்துள்ளன.

''கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின்

நிற்கத் அதற்குத் தக'' என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய நாம் பிழையின்றிக் கற்பதோடு கற்றபடி ஒழுகவும் பழகிக் கொள்வோமாக!

**நொ. வினுஸ்ரிகா**
**தரம் – 7A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களைப் பாதுகாப்போம்

உயிர்க்கோளம் என அழைக்கப்படுவது நாம் வாழுகின்ற பூமியாகும். இது நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களால் ஆனது. இதில் நிலத்தில் காணப்படுகின்ற பிரதான வளம் மரங்கள் ஆகும். இவை ஓர் அறிவுள்ள உயிர்களாயினும் இந்த மரங்கள் இல்லையென்றால் மண்ணில் உயிரினங்களே இல்லை. மண் படையினைக் காக்கும் இந்த காவல் தெய்வங்களான இந்த மரங்கள் இந்தப் பூமியின் சொத்துக்களாகும். அனைத்து நன்மைகளையும் மனிதன் இந்த மரங்களினூடாகப் பெற்றுக் கொண்டாலும் மனிதன் நன்றியற்றவனாக இருக்கிறான். ஆதலால் இவற்றை அழிக்கின்றான். இதுவே இன்றைய சூழல் மாசடைவிற்குக் காரணமாகும்.

மரங்களால் இந்த உலகு அடைகின்ற நன்மைகள் சொல்லில் அடங்காதவை. இந்த மரங்கள் காடுகளாகவும், தோப்புகளாகவும்இ பொதும்பல்களாகவும் காணப்படுகின்றன. இவை மாந்தருக்கு உண்ண உணவையும், உடுக்க உடையையும், வசிக்க வீட்டையும் தருகின்றன. இதுமட்டுமல்லாமல் மனிதனின் வாழ்க்கை பயணத்திலும் இந்த மரங்கள் தொடர்புபடுகின்றன. பிறக்கும் போது தொட்டிலாகி நடைபயிலும் போது நடைவண்டியாகி, படிக்க ஏடுகளாகி, முதிர்ந்த பருவத்தில் ஊன்றுகோலாகி, இறந்த பின் பாடையாகி சிதையிலும் உடன் கட்டை ஏறுவன இந்த மரங்கள். மரங்கள் இல்லையென்றால் மண்ணில் மனிதர்கள் வாழமுடியாது. ஆனாலும் நன்றியற்ற மனிதர்கள் இந்த மரங்களை பல்வேறு காரணங்களுக்காக அழிக்கின்றனர்.

வீடுகட்டுதல், பெருந்தெருக்களை அமைத்தல், நகரங்களை உருவாக்குதல், குடியிருப்புக்களை அமைத்தல் போன்ற காரணங்களிற்காகவும் தாளபாட உற்பத்தி மற்றும் பொருளாதாரத் தேவைகள் என்பவற்றுக்காகவும் மரங்கள் வெட்டப்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் காட்டுத் தீ பரவல், புயல், மழை போன்ற இயற்கை காரணங்களும் இந்த அழிவிற்குக் காரணமாகின்றன. இதுமட்டுமன்றி கொடிய போர்களும் இந்த அழிவிற்குக் காரணமாகும்.

காடுகள் இவ்வாறு அழிவதால் பாதிக்கப்படுவது இந்த உலகமே. குறிப்பாக மனிதன் செய்கின்ற தவறுகளுக்கு ஏனைய உயிரினங்களும் அவலத்தை சந்திக்கின்றன. காடுகள் அழிக்கப்படுவதனால் விலங்குகளின் வாழ்விடங்கள் அழிகின்றன. எத்தனையோ அரியவகை தாவரங்களும் அழிந்து போகின்றன. உதாரணமாக உலகத்தின் நுரையீரல் என்று அழைக்கப்படுகின்ற அமேசன் காட்டில் ஏற்பட்ட தீ பரவல் அவுஸ்ரேலிய காடுகளில் ஏற்பட்ட தீ பரவல் முதலியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சுட்டிக்காட்டலாம். இதுமட்டுமல்லாமல் மழைவீழ்ச்சி குன்றுதல், வெப்பநிலை உயர்வடைதல், காற்று தூய்மையிழத்தல், போன்ற பல்வேறு காரணங்களும் இங்கு குறிப்பிடலாம்.

எனவே இந்த உலகில் அனைத்து உயிரினங்களும் சிறப்பாக வாழவேண்டும் எனின் காடுகள் பாதுகாக்கப்படுவது அவசியமாகும். புதிய மரங்களை நட்டு மீள் வளமாக்கலை மேற்கொள்ளுதல், இருக்கின்ற மரங்களை அழிவடையாது பாதுகாத்தல், அனுமதியின்றி மரம் தறிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மூலம் இந்த மரங்களை பாதுகாக்க முடியும். வனவளம் காத்து நலன் பல பெறுவோம்.

**சே. அக்க்ஷயா**
**தரம் 8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரையில் ஒரு பொன்மாலைப் பொழுது

அன்று ஒரு நாள் மாலைநேரம் நான் எனது குடும்ப உறுப்பினர்களோடு கடற்கரைக்குச் சென்றிருந்தேன். அது ஒரு மாலை நேரம் வெயிலின் சூடு தணிந்தது. பொழுது போக்கிற்காக மக்கள் கடற்கரையில் ஒன்று கூடியிருந்தார்கள். சிலர் உடற்பயிற்சிக்காக கடற்கரை ஓரம் நடந்துகொண்டிருந்தார்கள். சிறுவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் கடற்கரை ஓரமே உற்சாகமாகக் காணப்பட்டது.

சூரியன் மேல் வானில் மறைவதற்கான வேலைகளை செய்துகொண்டிருந்தான். பொன்நிறக் கதிர்கள் கடற்கரை மணலை தங்கத் துகள்களாக மாற்றிக்கொண்டிருந்தன. வெண்ணிறக் கடலலைகள் கரையோடு மோதி முழக்கமிட்டன. மீனவரின் படகுகள் கடலின் மேல் போவதும் வருவதுமாக காணப்பட்டன. தூரத்தே சென்ற படகுகள் பூக்களில் தேன் அருந்தும் வண்ணத்துப் பூச்சிகள் போல காணப்பட்டன. ஆழ்கடலை வளைந்த வானம் முத்தமிட்டுக் கொண்டிருந்தது. அலைமோதும் இசையில் தாலங்களும், தாளைகளும் தலையாட்டி ஓலைக் கீற்றுக்களை அசைத்து நர்த்தனம் புரிந்தன.

மேற்குத் திசை வானத்தில் சூரியன் இந்திரஜால வித்தையை நிகழ்த்திக்கொண்டிருந்தான். மாறுகின்ற வண்ணங்கள், விசும்பினிடை நீந்திச் செல்லும் முகில்கள். உறக்கத்திற்கு மகிழ்வோடு ஆரவாரித்து கூடு செல்லும் பறவைகள் என கண்ணில் தென்படும் காட்சிகள் எல்லாம் மனதை நிறைத்து மகிழ்வித்தன. இந்தக் காட்சிகள் கவிஞர் வைரமுத்துவின் "இது ஒரு பொன்மாலைப் பொழுது வானமகள் நாடுகிறாள், வேறு உடை பூணுகிறாள்" என்ற பாடலை நினைவில் மீட்டுச் சென்றது.

வர்ணஜாலம் காட்டிய ஆதவன் வெப்பம் தணிக்க கடலினுள் மூழ்கலானான். கீழ்திசை வானத்தின்பால் நிறைகுடம் போல பால் நிலா தோன்றினாள். வான் வழியில் நட்சத்திரத் தோழிகள் புடைசூழ அவள் பவனி வரும் அழகு, பார்ப்பவர் மனங்களை கொள்ளையடித்தச் சென்றது. அலை தழுவும் மணலில் நண்டுகள் வரையும் ஓவியம். கால்தடம் பதிக்கும் மழலைகள், சிறுவர்கள் கட்டிய மணற் கோபுரத்தை அடித்துச் செல்லும் அலைகள், இப்படி மாலைநேரக் கடற்கரையில் கொட்டிக் கிடந்த அற்புத அழகினை கண்களால் கண்டு களித்த நான் கடற்கரையை விட்டுப் பிரிய மனமில்லாமல் தந்தையின் மகிழூந்தில் ஏறி வீடு வந்து சேர்ந்தேன்.

**சே. அக்ஷயா**
**தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது இலட்சியக் கனவு

எனது பெயர் ஞா. கிஷானிகா. நான் யா/இந்து மகளிர் கல்லூரியில் 6ஆம் ஆண்டு படிக்கிறேன். எனது இலட்சியம் நான் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்பது. ஏனென்றால் அது ஒரு சேவை நோக்கமுள்ள ஒரு உன்னதமான பணி. "மக்கள் சேவையே மகேசன் சேவை"

இந்த சேவையை செய்வதற்கு நிறைய பொறுமை சகிப்புத் தன்மையுடையவர்களாக இருக்க வேண்டும். இந்த சேவை செய்வதால் சமுதாயத்தில் ஒரு மதிப்பும் மன நிறைவும் கிடைக்கும். மருத்துவ தவறால் எந்த ஒரு உயிரும் இறக்காதபடி நான் சேவை செய்ய வேண்டும் என்பது எனது கனவு. எனது நாட்டிற்கும் எனது ஊருக்கும் எனது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நான் ஒரு நல்ல மருத்துவராக வந்து பெருமை சேர்க்க வேுண்டும் என்பதே என் முழு இலட்சியம்.

நான் அதற்காக முழுமுச்சாக எனது கல்வியைப் பயின்றுகொண்டிருக்கிறேன் எனது இலட்சியத்தை அடைவேன் என்ற நம்பிக்கையுடன். எனது கனவு நிறைவேறும் தருணத்தை மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆவலுடனும் எதிர்பார்த்து அதற்கான கடின முயற்சியை மேற்கொண்டுள்ளேன். எனது கனவு நனவாகும் நாள் அன்று எனது நட்டிற்கும் எனது பெற்றோருக்கும் எனது மக்களுக்கும் சேவை செய்ய எது பணியை மிகுந்த மனமகிழ்ச்சியோடு ஆரம்பிப்பேன். எனது கனவு நனவாகும் என நம்பி கடின முயற்சியுடன் கல்வி கற்பேன்.

**ஞா. கிக்ஷானிகா**
**தரம் - 6A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழியின் சிறப்பு

தமிழின் பெருமையை தமிழ்நாட்டில் உள்ள தலைவர்கள் மட்டுமல்ல வெளிநாட்டில் உள்ள பல தலைவர்களும் பாராட்டியுள்ளனர். மற்ற மொழிகள் எல்லாம் பேசுவதற்கு மட்டும் தான் உபயோகிக்கப்படும். ஆனால் தமிழ் உடலோடும் உணர்வோடும் கலந்த ஒரே மொழி.

தமிழ் மொழி 4400 ஆண்டுகள் பழமையானது என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். பாரதியார் தமிழுக்கு அழகு சேர்க்கும் அளவிற்கு …"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியுள்ளார். தமிழ்மொழி செம்மொழி என்ற பெருமையை பெற்றது. தொன்மை, தனித்தன்மை, பொதுமை, பண்பு, நடுநிலைமை, தாய்மை, தனித்து இயங்கும் தன்மை, இலக்கண, இலக்கிய வளம், கலைநயம், உயர்ந்த சிந்தனை, மொழிக்கோட்பாடு போன்ற பண்புகளை கொண்டதால் தான் தமிழ் மொழி செம்மொழி என்ற பெயரை பெற்றுள்ளது. ஒரு மொழி செம்மொழி ஆக வேண்டும் என்றால் குறைந்தது 1000 ஆண்டுகளாவது பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கும் போது நம்முடைய மொழி பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான மொழி

"செம்மொழி என்பதற்கு செம்மையான மொழி என்று அர்த்தம்" நம்முடைய மொழியில் எழுந்த இலக்கியங்கள், புதுக்கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள், தமிழ் வளர்ச்சியை அடைவதற்கு உதவியாக இருந்தது. திருவள்ளுவர், கம்பர், பாரதியார், ஔவையார் போன்றோர்கள் தமிழை வளர்த்து வந்தார்கள். இன்று உலகில் எழுந்த மொழிகள் பலவற்றிற்கு தமிழ் அடித்தளமாக உள்ளது. தமிழ் மொழிக்கு அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி பல எதிர்ப்புக்கள் இருந்து வருகிறது. இப்பொழுதும் ஆங்கில மொழியின் தாக்கம், வடமொழியின் ஆதிக்கம் எழுந்துள்ளது. நம்முடைய மொழியை காப்பது இந்த நாட்டில் உள்ள தமிழர்களின் கடமையாகும். தமிழ் அழியாமல் பேணிக்காப்பதற்கு முடிந்தவரை தமிழ் மொழி கல்வியை படிப்பது நல்லது. ஆங்கிலம் படிப்பது தவறு அல்ல. ஆனால் அது தமிழின் வளர்ச்சியை தடுக்காத அளவிற்கு இருக்க வேண்டும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்றுசங்கே முழங்கு" வரிகளுக்கு ஏற்ப நம்முடைய மொழி இன்று சிறப்பு வாய்ந்தாக உள்ளது. அந்த சிறப்பை நாமும் காத்து தமிழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தமிழ்மொழியான தமிழ் தொன்மையையும் சிறப்பையும் கொண்டு புகழின் உச்சியில் உள்ளது. அதனுடைய மேன்மைக்காக போராட வேண்டியது ஒவ்வொரு தமிழர்களின் இலட்சியமாக இருக்க வேண்டும்.

**வாழ்க தமிழ் ..! வளர்க தமிழ்...!**

**இ.இனியா**
**தரம் – 7B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் ஒரு மாணவியாக..........

நல்வழிப்படுத்த மாணவிகளின் கவிதையைப் பார்க்கும் போது
உதித்தது எனதுள்ளத்தில்
நானும் ஒரு மாணவியாக
எழுந்த எண்ணங்களை
கவிதையாக வடிக்க

ஞானத்தின் கோவிலிது
யாழ் இந்து மகளிர் கல்லூரி!
நானிலம் போற்றும் கல்விச் சிகரம்
எங்கள் தாய்க் கல்லூரி – நாளும்
இந்நாட்டின் நல்வழிப் பெண்கள்
உருவாகும் நிலம்

நாங்கள் வளர்க்கும் ஆத்ம பலமே
தேசத்தின் பலம்
இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேலான
இளம் பிறைகள் ஒளிர்கின்றனர்
அறிவின் வேள்வியில்
அகிலம் வியக்க
எமக்குள் வளர்கிறோம்
அன்னை போல் அரவணைத்து
நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள்
அன்பால் எமைத் திருத்தி
அறிவால் நல்வழிப்படுத்துவார்கள்

எனக்குள்ளும் ஒரு பெருமை
எனக்குக் கற்பித்த ஆசான்
இன்றும் என்னுடன்
சேவையாற்றுவதையிட்டு,
அவர் வழியில்
அவர் மாணவியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் இணைந்து
ஓர் ஆசிரியையாய்
சேவையாற்றக் கிடைத்தது
ஒரு வரம்.

இக் கல்லூரி எனக்களித்த
நல்லனுபவங்களை
ஒருங்கு சேர்த்து
எனது மாணவிகளுக்கு
பன்மடங்கு கொடுத்து

எனது ஆசானின் ஆசியுடன்
தொடர்வேன் சேவையை…..

பல்லாண்டு கண்ட பழமையிலே
புதுமை பூத்தது
பண்பாடும் கல்வியும்
கண்ணியமும் எம்முள் கோத்துது
எம்மை உருவாக்கிய பெருமை
என்றும் விலகாது
இந்து மகளிர் கல்லூரிப் புகழ்
இவ்வுலகம் உள்ளவரை ஓயாது!

**திருமதி. பானுரேகா சஞ்ஜீவன்**
**ஆசிரியர்**
**பழைய மாணவி(2005)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்

இன்று உலகமெங்கும் சுற்றுச் சூழல் சீர்கேடு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உயிரினங்கள் நல்ல நீரையோ, சுத்தமான காற்றையோ, சுகமான வாழ்வையோ நுகரமுடியாதனவாக அவதியுறுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம் நாள்தோறும் மோசமடைந்து வருகிறது. நிலம், நீர், காற்று என அனைத்துப் பகுதிகளிலும் மாசுபாடுகள் பெருகிய வண்ணம் உள்ளன. இதனால் உயிரினங்களின் வாழ்நாள் பெரிதும் குறைந்து கொண்டே செல்கிறது. சுற்றுச்சூழல் மாசடைவடைவதற்கு மனிதனது நடத்தைகளே பெரிதும் காரணமாகின்றன. சுத்தம் பேணி சூழலைக் காக்கவேண்டிய மக்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும், மாற்றிட முயலவேண்டும். இது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

இன்று நகரப்புறங்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. நகரங்களில் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிய வண்ணம் உள்ளது. சீரான குடியிருப்பு வசதிகள், நீர் விநியோக வசதிகள், கழிவுகளை உடனுக்குடன் அகற்றக்கூடிய வசதிகள் பெரிதும் குறைந்தே காணப்படுகின்றன. கழிவுநீர் செல்லும் வாய்க்கால்கள் பல அடைபட்டுள்ளன. இதனால் அழுக்குநீர் தேங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது. அழுக்கு நீரில் நோய்களைப் பரப்பும் கிருமிகள், நுளம்புகள் உற்பத்தியாகனின்றன. இதனால் தொற்று நோய்கள் பரவிட வழி ஏற்படுகின்றது.

நாம் வாழிடத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நாம் வாழ இடமளித்த நிலத்தையே மாசுபடுத்துகிறோம். நாளாந்தம் நாம் பாவித்துவிட்டு பொலித்தீன் உறைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவற்றை நிலத்தில் வீசி விடுகிறோம். அவை நிலத்தில் உக்காது நீண்டகாலம் புதைந்து கிடக்கின்றன. இதனால் கால்நடைகளுக்கே பெரும் பாதிப்பு ஏற்படுவதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

உயிரினங்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது நீர். நீரின்றி உலகில்லை. ஆனால் நீரினை நாம் பேணிப் பாதுகாக்கிறோம் என்று உரைத்திட முடியாதுள்ளது. நீர் நிலைகளைத் தூய்மையாக பயன்படுத்துவதை விடுத்து அவற்றில் அழுக்குகளை வீசுகிறோம். துணி துவைத்தல், பல்துலக்கி, எச்சில் துப்புதல், ஆடு, மாடு, நாய் போன்றவற்றைக் குளிப்பாட்டுதல் போன்ற செயல்களிலும் ஈடுபடுகிறோம். இதனால் நீர் நிலைகள் பெரிதும் மாசடைகின்றன. பெரும்பாலான இடங்களில் மக்கள் குடிநீரைக் கிணறுகள், குளங்கள் போன்றவற்றிலிருந்தே பெறுகின்றனர். இவற்றுள் ஆலைகளில் கழிவு நீர்களும் அழுக்கு பொருட்களும் வந்து கலப்பதனால் நீர் மாசுறுகின்றது. அழுக்கு நீரைப் பருகுவோர் நோய்கிருமிகள் உற்பத்தியாகவும் வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சாக்கடை வழியே செல்ல விடாது செய்வதால் வீதிகளில் வெள்ளம் தேங்கி நின்று தெருக்களே சாக்கடைகளாகும் நிலை ஏற்படுகின்றது. மலேரியா, டெங்கு, வாந்திபேதி போன்ற நோய்கள் உருவாவதற்கும் இவையே காரணமாக அமைகின்றன.

சுத்தமான காற்றையே சுவாசித்தல் வேண்டும். ஆனால், இன்றைய அவசர யுகத்தில் அதிகரித்து வரும் வாகனப் பெருக்கமும் வானளாவ எழுப்பப்படும் மாடிகளும் சுத்தகாற்றை நாம் சுவாசிக்க முடியாதவாறு செய்து விடுகின்றன. வாகனங்களும், தொழிற்சாலைகளும் அபரிதமாகப் பெருகி வருவதனால் அவற்றிலிருந்து வெளியாகும் நச்சுப் புகைகள் வாயு மண்டலத்தில் கலந்து நம்மை வந்தடைகின்றன. அவற்றை சுவாசிக்கும் மக்கள், சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு இலக்காகின்றார்கள். சில இடங்களில் வாயு மண்டலத்திலிருந்து அமில மழையே பொழிகிறது. இது உயிர்களுக்கு ஆபத்தையே விளைவிக்கின்றது.

இன்று மனிதர்களிடம் புகை பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருகின்றது. போக்குவரத்துச் சாதனங்களிலும் வீதிகளிலும் புகைப்பிடிப்போரால் பலர் பாதிப்புள்ளாகின்றனர். இத்தகைய நிலையைப் புதுக்கவிதை பாடும் கவிஞர் ஒருவர் நகைச்சுவையாக நாட்டுநடப்பை பின்வருமாறு கூறுகின்றார்.

‘இப்ப
சின்னஞ் சிறுசெல்லாம் சிகரெட் பிடிக்குது
சித்தப்பாமார்கிட்டத் தீப்பெட்டி கேட்டுகுது’

இது வேடிக்கை மட்டுமல்ல வேதனைக்குரியது. இந்நிலை மாறாவிட்டால் சுற்றாடல் சுத்தத்தை நாம் பேணிக் காக்கவே முடியாது. பூமியில் நிகழும் இத்தகைய வேண்டாத செயல்களால் ஓசோன் படலம் மேலும் பாதிக்கப்படவுள்ளது. இதனால் உயிரினங்கள் மேலும் பாதிக்கப்படலாமென அஞ்சப்படுகிறது. விண்வெளி ஆய்வுகளுக்கு செல்லும் ‘விண்கலங்கள்’ விரைந்து செல்லும் விமானங்கள் பலவும் வளிமண்டலத்துப் புறஊதாக்கதிர்களைப் பூமிக்கு வரச் செய்துவிடுகின்றன. இத்தகைய நிலை மாறவேண்டுமாயின் மக்கள் மனநிலை மாறவேண்டும்.

குப்பைகளை அதற்கென உரிய இடங்களில் போடவேண்டும். அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளவேண்டும். கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்புதல், இரைச்சல் மிகுந்த ஒலிபெருக்கிகளை பயன்படுத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். வருங்கால சந்ததியினர் வளமுடன் வாழ ஏற்றனவற்றை ஏற்படுத்திக் கொடுத்திட மக்கள் முன்வர வேண்டும். எந்தவொரு திட்டமும் மக்களின் ஒத்துழைப்பின்றி வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற முடியாது. சுற்றாடல் சுத்தம் பேணப்படவேண்டுமாயின் மக்கள் அதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சுருங்கக் கூறின் 'சுத்தம் சுகம் தரும்' என்னும் முதுமொழிக்கேற்ப நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுற்றாடற் சுத்தம் பேணப்படவேண்டும். அதனைப் பேணிக்காக்கும் பொறுப்பு மக்கள் அனைவரையுமே சார்ந்துள்ளது. சுத்தம் பேணிச் சூழலைப் பாதுகாக்க அனைவரும் உறுதி பூணவேண்டும். இதுவே காலத்தின் தேவையாகும்.

**ச.ஜோஎல்க்ஷேமாயா**
**தரம் – 8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துப் பாவனை தொடர்பான விழிப்புணர்வு

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" எனும் ஔவையாரின் வாக்கிற்கிணங்க மருந்துப் பொருட்களின் பாவனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் அவற்றை மீறும் பட்சத்தில் எதிர் கொள்ளவேண்டிய ஆபத்துக்கள் பற்றியும் தெளிவூட்டும் வகையில் இக்கட்டுரையில் கூற இருக்கிறேன்.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலே மனிதர்கள் தொற்றுநோய்களாலும் தொற்றா நோய்களாலும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இவற்றில் இருந்து விடுதலை பெறவோ அல்லது நோயின் வீரியத்தைக் குறைக்கவோ மருந்துப் பொருட்களின் பயன்பாடானது இன்றியமையாததொன்றாகும். இருந்தபோதும் இந்த மருந்துப் பொருட்களின் மூலம் இரசாயனப் பதார்த்தங்களாகவோ இல்லது நுண்ணுயிர்களை சரியான அளவில் திரட்டி உடலுக்கு தீங்கு ஏற்படா வண்ணம் நோய்களின் பிடியிலிருந்து விடுபடல் வேண்டும். இதற்காகவே நாம் மருத்துவர்களின் ஆலோசனையினை நாடவேண்டும்.

மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் எந்த மருந்துப் பொருட்களையும் உட்கொள்ளக் கூடாது. ஒவ்வொருவருக்கும் அவர்களின் நோயின் தன்மைக்கேற்பவும் உடல் நிலைக்கும் ஏற்றால் போல மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. மருந்தின் அளவானது வயது, பால், உடல் திணிவு என்பவற்றுக்கு அமைவாக கணிக்கப்பட்டு பரிந்துரைக்கப்படுகின்றது. இவ் அளவினை விட அதிகமான மருந்துப் பொருட்களை உட்கொள்ளும் பட்சத்தில் அவை நஞ்சாக மாறி எமது உடற் தொழிற்பாடுகளை சீர்குலைப்பதோடு கல்லீரல், சிறுநீரகம் என்பனவற்றின் செயலிழப்பிற்கும் காரணமாகிவிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மரணமும் சம்பவிக்கின்றது.

சீரான மருந்துப் பாவனை இருந்த போதும், பரிந்துரைக்கப்பட்ட மருந்தின் அளவினை சிகிச்சைக் காலம் முழுவதும் முழுமையாக பின்பற்றல் வேண்டும். அறிகுறிகள் குறைந்தாலும் சிகிச்சையை முழுமையாக முடிக்க வேண்டும். உதாரணமாக தொற்று நோய்களின் போது நுண்ணுயிர் கொல்லி மாத்திரைகள் ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றதெனில் நாம் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

மாற்று மருந்துகளை எமது எண்ணங்களுக்கேற்ப பயன்படுத்தக் கூடாது. பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளையே பயன்படுத்த வேண்டும். அத்தோடு எல்லா மருந்துப் பொருட்களும் பக்க விளைவுகளை கொண்டுள்ள போதும் சில பக்க விளைவுகளின் போது நாம் மருத்துவரை அணுக வேண்டும். சில மருந்துகள் போதை ஊட்டுவது போன்று பாவிப்பதும் உண்டு. இது கடும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதொன்றாகும். இந்த விடயத்தில் அனைவரும் அக்கறையோடு செயல்பட வேண்டும்.

மருந்துப் பொருட்களின் பாவனையின் மிக முக்கியமான ஓர் அங்கமாக மருந்துகளின் களஞ்சியப்படுத்தல் விளங்குகின்றது. நாம் மருந்துகளின் தன்மைக்கேற்ப உரிய வெப்பநிலையில் அவற்றைப் பேணவேண்டும். நேரடி சூரிய ஒளி படாதவாறு உரிய கொள்கலன்களில் பேணவேண்டும். மருந்துப் பொருட்களின் உற்பத்தி திகதி, காலாவதி திகதி என்பன முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். காலாவதி திகதி முடிந்தவற்றை ஒருபோதும் உட்கொள்ளக் கூடாது. இவ்வாறு மருந்துப் பாவனையை உரிய முறையில் செய்து நாம் உரிய பயனை பெற்று ஆரோக்கியமாக வாழ்வோமாக.

**வு.புவஹர்சினி**
**தரம் – 7E**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRUSTREX

## Asset management

Mutual trusts funds
Equity portfolio management
Real estates investments

## Risk management

Investments risk monitoring
Financial fraud prevent advising

## Global market & forex

Commodity investments
Global bonds of equities
Derivatives & hedging solution solution

## Wealth management

stocks and bonds
private wealth advisory
retirement planning serv́ce
tax optimization strategies

## Financial advisory

Investment risk analysis & mitigation
Corporaising service

## Investments

Money market
Fixed investments

**www.trustrex.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org